பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 09, வெள்ளிக்கிழமை 23.06.2017 | கதிர் 229


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# விக்கியின் கனடா வருகையின் போது திரட்டப்பட்ட நிதி இன்னமும் இங்கு அனுப்பப்படவில்லையாம்!

## கனேடியத் தமிழர் சமூக அமையம் அறிக்கை

றொறன்ரோ, ஜூன் 23

வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் கனடா விஜயத்தின்போது முதல்வர் நிதியத்துக்காக திரட்டப்பட்ட ஐம்பதாயிரம் கனேடிய டொலர் (சுமார் 50 லட்சம் ரூபா) முதல்வரின் மூலோபாயமதியுரைஞர் நிமலன் கார்த்திகேயனிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவித்து வெளியான செய்தியை கனேடிய தமிழர் சமூக அமையம் மறுத்துரைத்திருக்கின்றது.

அந்த நிதி இன்னும் தங்களிடம் கனடாவிலேயே இருக்கின்றது. அது முதல்வருக்கு அனுப்படவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான செய்தியை 'விக்கி அவர் ஆலோசகர் நிமலன் மீது 50 லட்சம் ரூபா மோசடிக்குற்றச்சாட்டு ! நிதிக் குற்றப் பொலிஸாரிடம் முறையிட கனேடிய தமிழர்கள் குழு தயாராகிறது' என்ற தலைப்பில் 'காலைக்கதிர்' தனது முன் பக்கத்தில் கடந்த செவ்வாயன்று பிரசுரித்திருந்தது.

பக்கம் 18 »

# சு.க. - கூட்டமைப்பு இன்று கூடிப் பேச்சு



## புதிய அரசமைப்பு விவகாரம் குறித்து



உத்தேச புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினரும், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினரும் இன்று பிற்பகல் கொழும்பில் கூடி விரிவான பேச்சுக்களை நடத்தவிருக்கின்றனர்.

பக்கம் 18 »

## இதுவரை நடந்தவை 'ஊடல்'; நேற்றைய அமர்விலோ 'கூடல்'!

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடந்த திங்கட்கிழமை வரை கன்னை கட்டிப் பிரிந்து நின்று, தமக்குள் முரண்பட்டு மோதிக் கொண்டிருந்த வடக்கு மாகாண சபையின் ஆளும்தரப்பு அணியினர் தமக்கு இடையேயான ஊடல் கடந்த திங்கள் இரவோடு முடிவுக்கு வந்தமையை அடுத்து நேற்றைய சபை அமர்வைக்

பக்கம் 18 »

## அவை ஆசனங்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் இருவர் இராஜினாமாச் செய்த சூழ்நிலையில் சபையில் ஆசன ஒழுங்கு நேற்று மாற்றப்பட்டது.

முன்னர் முதலாவதாக முதலமைச்சர், பின்னர் கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர், விவசாய அமைச்சர், கடற்றொழில் அமைச்சர், பிரதி அவைத்

பக்கம் 13 »

## புதிய அமைச்சர்களை நியமிக்க உறுப்பினர்களின் சுயவிவரம் திரட்டல்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண சபையில் வெற்றிடமாகியுள்ள இரு அமைச்சுப் பதவிகளுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் தாம் முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், புதிய அமைச்சர்களைத் தெரிவு செய்வதற்காக மாகாணசபையின் ஆளும்

பக்கம் 18 »

## தெமட்டகொடவில் 3 கார்கள் எரிந்தன

கொழும்பு, ஜூன் 23

கொழும்பு - தெமட்டகொடவில் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று கார்கள் நேற்று அதிகாலை திடீ

பக்கம் 18 »

## பொருத்து வீட்டை நிறுத்தக் கோரி நாடாளுமன்றில் இன்று பிரேரணை

### ஒத்திவைப்பு வேளையில் கொண்டு வருகிறார் சிறிதரன்



கொழும்பு, ஜூன் 23

பொருத்து வீட்டுத் திட்டத்தைக் கைவிடுமாறு கோரும் பிரேரணை ஒன்றை இன்று நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளைக்கான பிரேரணையாகக் கொண்டு வருகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

இது தொடர்பான பிரேரணைக்கான முன்ன

பக்கம் 18 »

## பதவியில் உள்ள அமைச்சர்களை விசாரிக்க புதிய விசாரணைக் குழு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண சபையில் தற்போது பதவியில் இருக்கும் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து முழுமை

பக்கம் 18 »


ஆண்மைக் குறைவிற்கு நிரந்தரத் தீர்வு
உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை
எங்கள்து மருந்தை ஒரு சில நாள்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற்கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தைப் பாக்கியம் பெறலாம். திருமணத்துக்குத் தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்.
பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார்
செல்: 0091 9842457673, 0091 9600336009
இலங்கை செல்: 075 4154364
வைத்திய கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை 89, இந்தியா
E-mail:sridevisiddha@gmail.com- Skype -sridevisiddha

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக் கூடி ஆராய்வு

கொழும்பு, ஜூன் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மதியம் நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித்

பக்கம் 18 »

## காயமுற்ற அதிரடிப் படையினருக்கு சிகிச்சை அளிக்க மறுத்த டாக்டர்கள்

கொழும்பு, ஜூன் 23

நேற்று முன்தினம் கொழும்பில் பேரணியாகச் சென்று சுகாதார அமைச்சுக் கட்டடத்துக்குள் நுழைந்து அதைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்

பக்கம் 18 »

## அளப்ப அருணாசலம்




## டாக்டர்களின் வேலை நிறுத்தம் தொடருமாம்!

சுகாதார அமைச்சுக்குள் புகுந்த பல்கலைக்கழக மாணவர்கள் துரத்தியடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை முதல் தாங்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தத்தைத் தொடர்வது என்று அரச மருத்துவர் சங்கம் நேற்று மாலை தீர்மானித்தது.

## ரயிலிலிருந்து குதித்த சீனப்பிரஜை காயம்

தமது பணப்பையை திருடிக் கொண்டு, ரயிலிலிருந்து குதித்துத் தப்பியோடிய நபரை, கையும் மெய்யுமாக பிடிப்பதற்காக, அதே ரயிலிருந்து குதித்து ஓடிய சீனப் பிரஜை ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுத்துறையிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் பயணித்த சீனப்பிரஜையின் பணப் பையை ஒருவர் திருடிக் கொண்டு, இரத்மலானை பகுதியில், ரயிலிலிருந்து குதித்துத் தப்பியோடியுள்ளார்.

தனக்கு பின்னாலேயே சீனப் பிரஜையும் குதித்தமையை அவதானித்த அந்தத் திருடன், தான் திருடிய பணப்பையை அவ்விடத்திலேயே போட்டு விட்டு, தப்பியோடிவிட்டார். அதனையடுத்து, அங்கிருந்த இளைஞர்கள் அந்தப்பையை எடுத்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# ஆசிரியர் நியமனம், இடமாற்றங்கள் தொடர்பில் விரைவில் புதிய கொள்கை

## ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை

பொலன்னறுவை, ஜூன் 23

ஆசிரிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பான புதிய கொள்கையை இவ்வாண்டில் அறிமுகப் படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய கொள்கைக்கமைய எந்தவொரு பாடசாலையிலும் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்க முடியாது என்பதுடன், மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்கள் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறவேண்டும் என்று சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பொலன்னறுவை, சுங்காவில முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடத்தை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு, நேற்று நடைபெற்றபோதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிலுள்ள பிள்ளைகளின் கல்வி சீராக வேண்டும் என்பதற்காக தீர்மானத்துக்கு வந்துள்ளேன். நாட்டிலுள்ள எந்தவொரு பிள்ளைகளுக்கும் கல்விக்கான சலுகைகள் கிடைக்காமல் இருக்கக்கூடாது.

அனைத்து இனத்தவர்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்தல், வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் ஒரே வகையில் சேவையாற்றுதல் ஆகியவை ஜனாதிபதி என்ற வகையில் எனது பொறுப்பு.-என்றார்.

மேற்படி வித்தியாலய நினைவுப் படிகத்தைத் திறந்து வைத்து, ஐந்து வகுப்பறைகளுடனான புதிய கட்டடத்தை, மாணவர்களுக்குக் கையளித்த ஜனாதிபதி, கண்காணிப்பு விஜயத்திலும் ஈடுபட்டார்.

புத்தெழுச்சிபெறும் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இந்த பாடசாலையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கான நிர்மாணப் பணிகளுக்கு, இலங்கை இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். (எ)



## நீதிமன்றத் தடயப்பொருளை திருடியோர் வசமாகச் சிக்கினர்



புத்தளம், ஜூன் 23

புத்தளம் நீதிமன்ற களஞ்சியசாலையில் தடயப் பொருளாக வைக்கப்பட்டிருந்த கேரளக் கஞ்சாவைத் திருடிச் சென்று விற்பனை செய்த ஐந்து சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக்கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், நேற்றுமுன்தினம் இரவு பாலாவி பிரதேசத்தில் 5 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் அந்த ஐந்து சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, இருவரை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், பிரதான சந்தேகநபரை 7 நாள்களுக்கு பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய இருவரும் நேற்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டமையையடுத்து, அவர்களையும் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில், அவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து புத்தளம் நீதிமன்ற களஞ்சியசாலையின் கூரையைப் பிரித்து 20 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவைத் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன், எஞ்சிய 15 கிலோ கிராம் கேரளா கஞ்சாவை அவ்வப்போது விற்று வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வாய்களில் கறுப்புத் துணி கட்டிப் போராட்டம்



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வவுனியா சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வாயில் கறுப்புத் துணியைக் கட்டி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாகக் கொட்டகை அமைத்து 50 ஆவது நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் தங்களுக்கு ஆக்கபூர்வமான முடிவுகள் எவையும் வழங்கப்படவில்லை, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தங்களது நியமனம் தொடர்பாக எழுத்து மூலமான முடிவை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன் வைத்தனர். அத்துடன், வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.

## இணைந்து பணியாற்றுவதன் மூலம் மனிதக் கடத்தலைக் கட்டுப்படுத்த முடியும்

### ஆஸி. எல்லைக் கட்டுப்பாட்டுப்பிரிவின் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

மனிதக் கடத்தல் சர்வதேச பிரச்சினை. எமது சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் ஊடாக இந்த அநியாயத்தைத் தோற்கடித்து மனித உயிர்களைப் பாதுகாக்கமுடியும் என்று ஆஸ்திரேலியாவின் சுயாதீன எல்லைச் செயற்பாட்டுப் பிரிவின் கட்டளைத் தளபதி எயார் மார்ஷல் ஸ்டிபன் ஒஸ் போர்ன் கூறியுள்ளார்.

பயனுள்ள சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதன் ஊடாக மனிதக் கடத்தல் படகுகளை நிறுத்துவதற்கு ஆஸ்திரேலியாவால் முடிந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலியாவின் எல்லைப் படைப் பிரிவின் ஓசன் சீல்ட் என்ற மிகப் பெரிய ரோந்துக் கப்பல் முதற் தடவையாக இந்தியா மற்றும் இலங்கைத் துறைமுகங்களுக்கு வருகை தந்திருந்தது.

இதன்போது, ஆஸ்திரேலிய எல்லைப் படைப் பிரிவின் குழுவினர், இலங்கைக் கடற்படை மற்றும் இந்திய கடலோரப் பாதுகாப்புப் பிரிவினருடன் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், பயிற்சி நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின் முக்கியத்துவம் பற்றி ஆஸ்திரேலியாவின் சுயாதீன எல்லை செயற்பாட்டுப் பிரிவின் கட்டளைத் தளபதி ஸ்டிபன் ஒஸ்போர்ன் உரையாற்றும் போது இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் இலங்கையர்கள் 25 பேரை ஏற்றிச் சென்ற மனிதக் கடத்தல் படகு ஒன்று ஆஸ்திரேலியாவால் இடைநடுவில் பிடிக்கப்பட்டதுடன், இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு அந்த 25 பேரையும் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பினர் என அவர் மேலும் கூறினார்.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம்

### சுற்றுலா ஊக்குவிப்பு பணியக புதிய தலைவர் கருத்து

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏகபோகத்தை நீக்கி கூடுதலான விமான சேவை நிறுவனங்களைக் கவர்ந்திழுப்பது அவசியம் என்று சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் புதிய தலைவர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை சுற்றுலாத்துறை சார்ந்த பல பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்க்கவேண்டி உள்ளது. இதற்காக முதலில் விமான நிலையத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டும்.

அதன்படி, கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏகபோகத்தை நீக்கி கூடுதலான விமான சேவை நிறுவனங்களைக் கவர்ந்திழுப்பது அவசியம்.-என்றார்.

## 'உதிரி' தனிநபர் நாடக அளிக்கை கலைத்தூது கலையகத்தில் இன்று

தமிழகத்திலிருந்து வருகை தந்த 'உதிரி நாடக நிலம்' என்ற இளம் கலைஞர்களின் 'உதிரி' தனிநபர் நாடக அளிக்கை இன்று மாலை 3 மணிக்கு இல:286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

காட்டுவாசி ஒருவன் நகரத் துக்குள் வாழத் தொடங்கியதும், இயற்கையைப் பிரிந்து, இயந்திரம்போல் இயங்கும் நகரவாழ்க்கையில் ஒரு சுயமிழந்த உதிரியாக மாறுகின்றான். இயற்கையே எமது உயிர் அதை இழந்து இயந்திரங்களாய் வாழக் கூடாது என்ற கருத்தை முன்வைத்து சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த அளிக்கை அரங்கேற்றப்படுகின்றது.

நாடகத்துறை சார்ந்த கலை ஞர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரும் இவ்வாறு கையை பார்வையிட்டு பயன்பெறலாம் என்று திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது.

# ஞானசார தேரர் விடயத்தில் பொலிஸார் இரட்டை வேடம்!

## கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்து அம்பலப்படுத்தினார் நீதிவான்

கொழும்பு, ஜூன் 23

ஞானசார தேரர் தொடர்பில் பொலிஸார்பாரபட்சமாகநடந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த கொழும்பு மேலதிக நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல, பொலிஸார் முன்னுக்குப் பின் முரணான வகையில் அறிக்கை சமர்ப்பித்து தேரரைப் பாதுகாக்கின்றனர்எனக்குற்றமும்சுமத்தியுள்ளார்,

பொலிஸார் ஆளாளுக்கு வேறுவேறு விதமாகசட்டத்தைப் பயன்படுத்த முனைகின்றனர் எனக் கூறிய நீதிவான், ஞானசார தேரர் விடயத்தில் பொலிஸாரின் இரட்டைவேடத்தையும் திறந்த நீதிமன்றில் வைத்து அம்பலப்படுத்தினார்.

ஞானசார தேரரைப் பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்து பொலிஸார் நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போதே நீதிவான்பொலிஸாரின்செயற்பாடு தொடர்பாகக் கடும் அதிருப்தி வெளியிட்டார்.

"நாட்டில் இடம்பெறும் விடயங்களையோ தற்போது நிலவும் நிலைமையையோ கருத்தில் கொண்டு என்னால் தீர்மானம் எடுக்க முடியாது. நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் கருத்துக்களுக்கு அமையவே நான் தீர்மானிக்க முடியும்.

"நாட்டில் இடம்பெறும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் பொலிஸாரின் அறிக்கையைக் கொண்டே நீதிமன்றம் தீர்மானங்களை எடுக்கும்.

"எனவே பொலிஸார் அது தொடர்பில் மிக தெளிவாக இருக்க வேண்டும். இவ்வாறான ஒருவருக்கு ஏன் பிணை அளித்தீர்கள் என பொது மக்கள் நீதிமன்றைத்தூற்றுவார்கள். பொலிஸாரின் நடவடிக்கையால் நீதிமன்றமே தலைகுனிவை சந்திக்கும். பொலிஸாரின் நடவடிக்கை குறித்து மிகவும் கவலையடைகின்றேன்" – எனவும் நீதிவான் புத்திக ஸ்ரீராகல தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வணகலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பிலான வழக்கு விசாரணையின் போதே பொலிஸார் சார்பில் ஆஜரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வாவிடம்கேள்விக்கணைகளை தொடுத்த நீதிவான் இவ்வாறு தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

ஞானசார தேரர் மீது 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில், அரசியல் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் முன்னதாக நீதிவானுக்குப் பொலிஸார் அறிக்கை சமர்பித்திருந்தனர். அந்த அறிக்கை நேற்று முன்தினம் பொலிஸாரால் இடையீட்டு மனுவொன்றினூடாக வலுவிழக்கச் செய்யப்பட்டு புதிய குற்றச்சாட்டுக்களின் கீழ் புது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னதாக சமர்பிக்கப்பட்ட அறிக்கையானது பாதுகாப்பாக எவரும் பார்வையிட முடியாதவாறு அப்போதிலிருந்து நீதிவானால் பாதுகாக்கப்பட்டுவந்த நிலையிலேயே தற்போதைய வழக்கு விசாரணையின் இடை நடுவே நீதிவான் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

ஞானசார தேரருக்கு பிணை வழங்க எதிர்ப்பு இல்லை என பிரதி பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா குறிப்பிட்ட நிலையில் நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல பின்வருமாறு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"இதற்கு முன்னர் ஒரு 'பீ' அறிக்கையை என்னிடம் தாக்கல் செய்தீர்கள். இரகசிய அறிக்கை என கூறினீர்கள். அதனால் அதனைப் பெட்டகத்தில் வைத்து நான் பாதுகாத்தேன். ஐ.சீ.சீ.பி.ஆர். சட்டத்தின் கீழ் அதில் குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதனை வாசித்தபோது அதன் பார தூரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. நாடே பற்றி எரியும் வகையில் அதன் தன்மையை நான் உணர்ந்தேன்.

"எனினும் இன்று(நேற்றுமுன் தினம்) புதிய 'பீ' அறிக்கையை சமர்ப்பித்தீர்கள். அதில் முதல் அறிக்கையில் குறிப்பிட்ட ஒரு விடயம் கூட இல்லை. ஏன் இந்த இரண்டு வேடங்கள்?" – என கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதிலளித்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் கமல் சில்வா–

"உண்மையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில்பொலிஸ்சட்டப்பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபருடனும் கலந்துரையாடிய பின்னரேயே நாம் இந்த புதிய அறிக்கையைசமர்ப்பித்தோம்"–என்றார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நீதிவான் –

"ஞானசார தேரருக்குப் பிணை வழங்க நீங்கள் எதிர்ப்பு எதனையும்தெரிவிக்கவில்லை. சாதாரண ஒருவர் தொடர்பில் நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வீர்களா? குற்றம் இடம்பெற்ற இடத்தை பார்வையிடச் சென்றவரைக்கூட நீங்கள்கைதுசெய்து பிணைச் சட்டத்தின் 14 ஆவது அத்தியாயத்தின் கீழ் பிணை வழங்க எதிர்ப்பு வெளியிட்டே ஆஜர் செய்வீர்கள்.

"இந்த வழக்கில் முதலில் நீங்கள் தாக்கல் செய்த 'பீ' அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் பிணை வழங்க முடியாத மிகப் பாரதூரமான குற்றங்கள். ஏன் அதில் உள்ள ஒன்று கூட இந்த அறிக்கையில் இல்லை? அவற்றுக்கு சாட்சிகள் இல்லையா? இல்லை எனில் ஏன் அப்படி ஒரு 'பீ' அறிக்கையை சமர்ப்பித்தீர்கள்?,

"நள்ளிரவு 12 மணிக்கு என்னை எழுப்பிய நீங்கள் அவசர விடயம், அபாயகரமான விடயம் எனக் கூறித்தானே அந்த 'பீ' அறிக்கையைசமர்ப்பித்தீர்கள்?

"உங்களில் ஒருவரின் தொப்பியைகழற்றினார்எனவும்சீருடையைப் பிடித்து இழுத்தார் எனவும் தள்ளிவிட்டார் எனவும் நீங்கள் தானே கூறினீர்கள்? ஏன் அது ஒன்றும் இந்த புதிய 'பீ' அறிக்கையில் இல்லை? அந்த 'பீ' அறிக்கையில் உள்ள வார்த்தைப் பிரயோகங்களைப் பார்த்தபோது நாடே கொளுந்துவிட்டு எரியும் அபாயம் காணப்பட்டது." – என்றார்.

இதன்போது பிரதிப்பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா–

"இந்த விசாரணை ஆரம்பத்தில் நான் அதற்கு பொறுப்பான கடமையில் இல்லை. நான் குற்றங்கள் தொடர்பிலான பிரதி பொலிஸ் மா அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் விசாரணைகள் மிக ஆழமாக என் ஆலோசனைப்படி முன்னெடுக்கப்பட்டன." – என்றார்.

இந் நிலையில் ஞானசார தேரருக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் குற்றச்சாட்டுக்களை கமல் சில்வா மன்றில் பிரஸ்தாபித்த நிலையில், நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல மீளவும் திறந்த மன்றில் கருத்துக்களை தெரிவித்தார்.

"நீங்கள் முதல் 'பீ' அறிக்கையில் தெரிவித்த விடயங்களால் அதனைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என கூறினீர்கள். அதனால் இதுவரை அது என் கைகளிலேயே இருந்தது. வீட்டில் கூட யாரும் பார்த்துவிடக்கூடாது என்பதில் நான் அவதானமாக இருந்தேன். அப்படியாயின் நீங்கள் அதில் கூறியுள்ள குற்றங்கள் எதனையும் சந்தேகநபர் புரியவில்லையா? ஏன் அதில் அவ்வாறு குறிப்பிட்டீர்கள்" – என நீதிவான் மீள கேள்வி எழுப்பினார்.

இதன்போது பிரதிப்பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா–

"இல்லை. சந்தேகநபர் அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை புரிந்தார்தான்" என்றார்.

"அப்படியானால் ஏன் அவற்றை வாபஸ் பெற்றீர்கள்?" – என நீதிவான் மீளக் கேட்டார்.

"அவசரமாக இந்த பிரச்சினையைத் தீர்த்து சந்தேக நபருக்கு எதிராக குற்றப் பத்திரிகை ஒன்றைத் தாக்கல் செய்யவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன." – எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா பதிலளித்தார்.


"பொலிஸாராகிய உங்களது நடவடிக்கைகள் கவலையளிக்கின்றன. சந்தேக நபருக்கு பிணை மறுக்க எந்த காரணமும் உங்களால் முன்வைக்கப்படவில்லை. பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டுக்கள் மீளப் பெறப்பட்டுள்ளன." – என கூறி நீதிவான் பிணை அனுமதி வழங்கினார்.

அத்துடன் பொலிஸாரின் சீருடையை கழற்றுவதாகவும் முஸ்லிம் குடும்பங்களை கொலை செய்வதாகவும் பொலிஸ் வாகனத்தை தீயிட்டு கொளுத்துவதாகவும் கூறிய எந்த விடயமும் புதிய அறிக்கையில் இல்லை எனச் சுட்டிக்காட்டிய நீதிவான், நாட்டில் என்ன நடந்த போதும் நீதிமன்றில் முன் வைக்கப்படும் கருத்துக்களை மட்டும் மையப்படுத்தியே தன்னால் தீர்மானிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

பொலிஸாராகிய உங்கள் நடவடிக்கை காரணமாக நீதிமன்றையே பொதுமக்கள் குறை கூறுவர். இவர் போன்ற ஒருவருக்கு ஏன் பிணை வழங்கினீர்கள் எனப் பொதுமக்கள் கேட்பார்கள் என சுட்டிக் காட்டிய நீதிவான் வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதன் போது ஞானசார தேரர் பொலிஸ் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என உத்தர வொன்றைப் பிறப்பிக்குமாறு பொலிஸார் நீதிவானைக் கோரினர்.

இதன்போது, "அவர் தானாக விசாரணைக்கு வந்து ஆஜராகியுள்ளார் என நீங்கள் தானே கூறினீர்கள்? அப்படியானால் அவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ள நிலையில் அப்படியான உத்தரவு தேவையற்றது" – என அறிவித்து அதனை நீதிவான் நிராகரித்தார். (ம)




## கிளி. – முழங்காவில் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு மக்கள் நேற்றுப் போராட்டம்

### தப்பிய சாரதியைக் கைது செய்யாமையைக் கண்டித்து



கிளிநொச்சி – முழங்காவில் பொலிஸ் நிலையத்தை நேற்று முற்றுகையிட்டு பொதுமக்கள் நடத்திய போராட்டத்தால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

சுமார் 300 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் நாச்சிக்குடா சந்தியில் இருந்து முழங்காவில் பொலிஸ் நிலையம் வரை பேரணியாகச் சென்று, பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி இரவு முழங்காவில் பகுதியில் மன்னாரில் இருந்து வந்த கார் மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த அ.அபினேஸ் (வயது–1) என்ற சிறுவன் நேற்று முன்தினம் உயிரிழந்தான்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி காருடன் தப்பியோடியிருந்த நிலையில், காரின் இலக்கத்தகடு விபத்து நடந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாரதியைக் கைது செய்யவில்லை.

பொலிஸாரின் இந்தச் செயலைக் கண்டித்தே பொதுமக்கள் நேற்று பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்குச் சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்திருந்தார். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயனற்ற அலுவலகம்

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக' விடயம் அரங்கேறியிருக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் ஓர் உணர்ச்சி பூர்வமான விடயம். அதில் அரசியல் சித்து விளையாட்டுகளுக்கு இடமில்லை. இடம் கொடுக்கக்கூடாது.

காணாமலாகக்கப்பட்டோர் பிரச்சினையில் அதிகம் பாதிப்புற்றவர்கள் தமிழர்கள்தாம்.

கண்ணுக்கு முன்னால் தமது உறவுகளைக் கடைசியாகக் கண்டவர்கள், அதற்குப் பின் அவர்களுக்கு என்னவாயிற்று, அவர்கள் எங்கிருக்கின்றார்கள், உயிருடன் உள்ளனரா, இல்லையா என்பவை அறியாது பதைபதைத்துக் கொண்டிருக்கின்றனர். எங்கோ ஒரு மூலையில் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நப்பாசையில் - நம்பிக்கையில் - வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கணவனைத் தேடும் மனைவி, இளம் மகனைத் தேடும் வயதான பெற்றோர், தமது சிறுவயதில் தம்மை விட்டுப் பிரிந்த அப்பாவைக் காணத்துடிக்கும் பிள்ளைகள், வீட்டுத் தலைவனுக்காக ஏங்கிக் கிடக்கும் குடும்பம் என்று இந்தத் துயரம் சொல்லி மாளாதது; எழுத்தில் வடிக்க முடியாதது.

உயிருக்கு உயிரான உறவுகளின் நிலை அறிய ஏங்கித் தவிக்கும் இந்த மக்களின் அவலநிலைக்கு இன்னும் ஒரு முடிவு இல்லை. முடிவு கிட்டும் என்பதற்கு ஒரு சிறு கீற்றுக் கூட நம்பிக்கையுமில்லை.

இது தொடர்பில் வடக்கின் சகல மாவட்டங்களிலும், திருகோணமலையிலும் காணாமல் போனோரின் உறவுகள் நடத்தும் போராட்டம் நூறு நாள்களைத் தாண்டி விட்டது. பயனுள்ள ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை; நடப்பதற்கான சாத்தியம் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஆனால், ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்திலும் அதன் பின்னர் சர்வதேச அரங்கில் கட்டவிழ்ந்த இலங்கை விவகாரங்களிலும், இங்கு காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் முன்னேற்றகரமான நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருப்பதாக ஒரு கதை விடப்பட்டது.

'காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையாளுவதற்கான அலுவலகம்' ஒன்றைத் திறப்பதற்கும் அதற்கான ஆணையாளர்களை நியமிப்பதற்கும் வழி செய்யும் சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியதே அது.

அது ஒரு சாதனை என்ற மாதிரியும், அந்த அலுவலகத்தை இயங்கச் செய்வதற்கு முட்டுக்கட்டையாக உள்ள விடயங்களை நீக்குவதற்கு ஒரு சில திருத் தங்களை அச்சட்டத்துக்குக் கொண்டுவர இருப்பதாகவும், அதைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தின் அடிப்படையில் அந்த அலுவலகத்தை இயங்கவிட்டால் இவ்விவகாரத்தை ஒட்டிய பல பிரச்சினைகள் சுமுகமாக்கப்பட்டுவிடும் என்ற பாணியிலும் கருத்துகள் வெளியிடப்பட்டு வந்தன.

அரசுத் தரப்பால் மாத்திரம் அல்ல, இந்த விடயங்களைக் கையாளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சார்பிலும் கூட அத்தகைய நம்பிக்கை தரும் விடயங்களே இதுவரை முன்வைக்கப்பட்டு வந்தன. ஆனால், இப்போதுதான் உண்மை அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

இந்த அலுவலகம் காணாமல் போனோர் தொடர்பில் தேடுதல்களை நடத்திக் கண்டுபிடிக்க முடியாத விடத்து, சில அம்சங்களின் அடிப்படைகளில் சம்பந்தப்பட்ட நபருக்கான மரணச் சான்றிதழை வழங்கும். அவ்வளவுதான்.

சம்பந்தப்பட்ட நபர் எவ்வாறு காணாமலாக்கப்பட்டார், அப்படி காணாமலாக்கப்பட்ட சம்பவத்துக்கு யார் பொறுப்பு, அச்சமயத்தில் நடந்தவை யாது, இக்கொடூரத்தைப் புரிந்தவர்களை அடையாளம் கண்டு தண்டித்தல் போன்றவை தொடர்பான எந்த விசாரணையையும் இந்த அலுவலகம் முன்னெடுக்காது; அதற்கு அப்படிச் செய்வதற்கு அதிகாரம் ஏதும் கிடையாது என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இத்தகைய ஒரு வலுவற்ற - மதிப்பற்ற - பொறுப்பற்ற - அலுவலகத்தை அமைப்பதன் மூலம் காணாமலாக்கப்பட்ட விவகாரத்தை ஒட்டி எழுந்துள்ள மக்களின் சூட்டைத் தணிக்கலாம் என்று அரசு நினைக்குமானால் அது வெறும் பகல் கனவன்றி வேறில்லை.

இந்த அலுவலகம் அமைக்கப்பட்டமையை ஒரு முற்போக்கான நடவடிக்கை என தமிழ்க் கூட்டமைப்பிலேயே ஒரு சில தலைவர்கள் நினைக்கலாம். அது அவ்வாறல்ல என்பதைக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான சரவணபவனே நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"இந்த விவகாரத்தை விரைந்து தீர்க்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால், இவ்விடயத்தில் பாதிக்கப்பட்டவர்கள், அரசு நிறுவும் இந்த அலுவலகத்தை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. இந்த அலுவலகம் நிறுவப்பட்டு அதன் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் விரும்பும் வகையிலான விசாரணைப் பொறிமுறையும் உள்ளடக்கப்பட வேண்டும்." - என சரவணபவன் எம்.பி. சுட்டிக் காட்டும் இந்தக் கருத்தே, காணாமல் போனோரின் உறவுகளினதும் தமிழ்ப் பொதுமக்களினதும் நிலைப்பாடாகும்.

காணாமல் போனோரை உயிரிழந்தவர்களாக அறிவிக்கும் ஏற்பாடுதான் இது. காணாமலாக்கியோரை மடக்கும் எத்தனம் அல்ல இது.

# மேற்குலக நாடுகளின் அழுத்தத்தால் இராணுவத்தை தொந்தரவு செய்கிறது அரசு

### பாக்.மாநாட்டில் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

போரை வெற்றிகொண்ட இராணுவத்தினரைத் தற்போதைய அரசு தொந்தரவு செய்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ளார்.

உயிரைப் பணயம் வைத்து நாட்டை மீட்ட இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்குலக நாடுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தத்தால் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் கூறினார்.

இஸ்லாமாபாத் அசெரேனா ஹோட்டலில் பாகிஸ்தான் ஆர்.எஸ்.எஸ். நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சமாதானத்துக்காக இலங்கையின் போர் மற்றும் அதன் பாடம்' என்ற மாநாட்டில் உரையாற்றும் போதே மஹிந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தீவிரவாதிகளுக்குப் புரியும் மொழியில் பதில் வழங்க வேண்டும். நல்ல தீவிரவாதி, கெட்ட தீவிரவாதி எனப் பிரிக்க வேண்டாம். ஜனநாயகத்தின் பரம எதிரியே தீவிரவாதிகள் என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்து விட வேண்டாம்.

விடுதலைப் புலிகளைத் தோல்வியடையச்செய்து போர் வெற்றியைப் பெறுவதற்காகப் பாகிஸ்தான், சீனா மற்றும் இந்தியா ஆகிய பிரதான நாடுகள் வழங்கிய உதவியை முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் நான் மதிக்கின்றேன். - என்றார்.

இந்த மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும மற்றும் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (எ)

# யாழ். கம்பன் விழாவில் நாளை


புலவர் இரெ.சண்முகவடிவேல்


பேராசிரியர் வி.அசோக்குமாரன்


பேராசிரியர் த.ரெங்கராஜா


த.சித்தார்த்தன்


இ.அங்கஜன்


இ.ஜெயராஜ்


தி.திருநந்தகுமார்


இரா.செல்வவடிவேல்

### காலை நிகழ்வு

அகில இலங்கைக் கம்பன் கழகம் இன்று தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நடத்தும் நான்கு நாள் கம்பன் விழாவில் நாளை இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகள் 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் நா.சிவநாதன் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ம.தயாபரன் கடவுள் வாழ்த்து இசைப்பார்.

தலைமையுரையைத் தொடர்ந்து பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தொடக்கவுரை ஆற்றுவார்.

தொடர்ந்து தமிழகத்தின் பேராசிரியர் வி.அசோக்குமாரன் 'கம்பனில் துறவு' என்ற தலைப்பில் இலக்கியப் பேருரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து தமிழகத்தின் புலவர் இரெ.சண்முகவடிவேல் நடுவராகப் பணியாற்ற, சுழலும் சொற்போர் 'நெஞ்சில் பெரிதும் நிலைகொள்ளும் சிறுபாத்திரம்' என்ற தலைப்பில் ஆரம்பமாகும்.

'கூனியே!' என ந.ஐங்கரன், 'நீலமாலையே!' என இ.சர்வேஸ்வரா, 'திரிசடையே!' என ச.லலீசன், 'சபரியே!' என த.நாகேஸ்வரன், 'அகலிகையே!' என த.ரெங்கராஜன், 'விராதனே!' என ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் சொற்போர் நிகழ்த்துவர்.

### மாலை நிகழ்வு

மாலை நிகழ்வு 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் தலைமையில் வி.சித்தார்த்தன் - வி.பிரதித்தன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் மங்கல விளக்கேற்ற, கடவுள் வாழ்த்தை கலாநிதி ஸ்ரீதர்சனன் இசைப்பார்.

தலைமையுரையை அடுத்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தொடக்கவுரையை ஆற்றுவார்.

தொடர்ந்து நடுவர் கம்பவாரதி இ.ஜெயராஜ் தலைமையில் 'அறத்தடுமாற்றத்தால் அதிகம் உழன்றவன்' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் இடம்பெறும்.

'தசரதனே!' என தி.திருநந்தகுமார், த.ரெங்கராஜன் ஆகியோரும், 'மாரீசனே!' என இரெ.சண்முகவடிவேல், ந.விஜயசுந்தரம் ஆகியோரும், 'கும்பகர்ணனே!' என வி.அசோக்குமாரன், ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோரும் வாதிடுவர்.


ச.லலீசன்


சுரேஷ் பிறேமச்சந்திரன்


பேராசிரியர் ம.சின்னத்தம்பி


ஸ்ரீ.பிரசாந்தன்


ந.விஜயசுந்தரம்


பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா


த.நாகேஸ்வரன்

# ரயில் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தினால் நடவடிக்கை எடுக்கவும்

### பொலிஸாருக்கு உத்தரவிட்டார் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல

கொழும்பு, ஜூன் 23

ரயில் போக்குவரத்துக்கு தடையேற்படுத்தும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரயில் சாரதி, உதவியாளர்களின் சங்கம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பணிப்புறக்கணிப்பு காரணமாக ரயில் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்று ரயில் சாரதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனினும், ரயில் போக்குவரத்துக்கு சிலர் தடையேற்படுத்துகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பில் பிரதமரின் செயலாளர் சட்டம், ஒழுங்கு அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து ரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ரயில் சாரதிகளின் உதவியாளர்களுக்கு பிரச்சினைகள் இருந்தால், அது தொடர்பில் பேச்சு நடத்த பிரதமரின் செயலகம் தயாராக இருப்பதாகப் பிரதமரின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## நாளை

24.06.2017
சனிக்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம் கா. 6.06 வரை
திருவாதிரை பி.இ. 4.33 வரை
திதி : சதுர்த்தசி மு.ப 11.41 வரை
சுபநேரம் : 2.55 – 4.25 வரை
இராகுகாலம் : 8.55 – 10.25 வரை

# ஜெனீவா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்கும் குழுவில் ஓரங்கட்டப்பட்டார் மங்கள!

கொழும்பு, ஜூன் 23

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான பொறிமுறை ஒன்று இலங்கை அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படாமல் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஓரம்கட்டப்பட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை அரசு இணங்கியிருந்தது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கைக்குக் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில், இந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சர்கள் மட்டக் குழுவொன்றை நியமிக்க இலங்கை அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் அளித்தது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையைச் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்கள் மட்டக் குழு, அதற்கு உதவும் வகையில் அதிகாரிகள் மட்டக் குழு ஆகியவற்றை நியமிப்பதற்கு அமைச்சரவையில் அனுமதி அளிக்கப்பட்டது.

பிரதமர் ரணிலின் தலைமையிலான அமைச்சர்கள் மட்டக் குழுவில், அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மஹிந்த சமரசிங்க, சாகல ரத்நாயக்க, விஜேதாச ராஜபக்ஷ, திலக் மாரப்பன, ருவான் விஜேவர்த்தன மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக, வெளிவிவகார அமைச்சராக இருந்து, ஜெனீவா நெருக்கடியைக் கையாண்டவரும், ஜெனீவா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியான கருத்தைக் கொண்டிருப்பவருமான, நிதியமைச்சர் மங்கள சமரவீர இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படாமை அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர்கள் குழுவின் விவரம் வெளியிடப்பட்டபோது, மங்கள சமரவீர அதில் உள்ளடக்கப்படாவிடின் அது பெரும் தவறாக இருக்கும் என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீரவுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர் ஒருவரையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

இதற்கமைய சுசில் பிரேமஜெயந்தவின் பெயரையும் உள்ளடக்க பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், நிதியமைச்சில் தமக்கு அதிகம் வேலை இருப்பதால் இந்தக் குழுவில் பங்கேற்க முடியாது என்று மங்கள சமரவீர மறுத்து விட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரச தகவல் திணைக்களத்தில் புனித நோன்பு இப்தார் நிகழ்வு!



கொழும்பு, ஜூன் 23

இஸ்லாமியர்களின் புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் கலாநிதி ரங்க கலான் சூரியவின் வழிகாட்டலின் கீழ் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்ற தலைபில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சங்கைக்குரிய தம்பர அமல தேரர் உள்ளிட்ட மதத்தலைவர்கள் பலர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இராணுவ உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களும் பங்குகொண்டுள்ளனர்.

## அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டைப் புதுப்பிக்க இலங்கை விருப்பம்

கொழும்பு, ஜூன் 23

அமெரிக்காவுடன் 2007ஆம் ஆண்டுசெய்துகொள்ளப்பட்ட, பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டை புதுப்பித்துக் கொள்வதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'கடந்த 2007 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட கையகப்படுத்தல் மற்றும் குறுக்குச் சேவைகள் உடன்பாடு இந்த ஆண்டு காலாவதியாகியுள்ளது. இதனைப் புதுப்பிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இந்த உடன்பாடு பாதுகாப்புத் துறையில் இலங்கையின் ஆற்றலை வலுப்படுத்தும்.

அத்துடன், இலங்கைப் படைகளுக்கு பயிற்சி மற்றும் திறன் விருத்தி வாய்ப்புகள் கிடைக்கும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இயங்குதிறன் அதிகரிக்கும்.

இந்த உடன்பாட்டின், அமைதி காப்பு நடவடிக்கைகள், மனிதாபிமான நடவடிக்கைகள், கூட்டுப் பயிற்சிகளின் போது, இடமாற்ற, விநியோக பரிமாற்ற, உதவி மற்றும் எரிபொருள் மீளநிரப்பல் சேவைகளை வழங்குவதற்கு வழிவகுக்கும்.

தற்போதுள்ள சர்வதேச அரசியல் சூழலில் இந்த உடன்பாடு எமது நாட்டுக்கு சாதகமானது.

தொழில்நுட்ப விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க பிரதிநிதிகளுடன், முப்படைகளின் தளபதிகள், கடலோரக் காவல் படை பணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துரையாடிய பின்னர், இது தொடர்பாக அமெரிக்காவுடன் பல்சுற்று பூர்வாங்கப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்த உடன்பாட்டில் கைச்சாத்திடுவதற்கு, தமக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது என அமெரிக்க அரசு இலங்கை அரசுக்குத் தகவல் அனுப்பியுள்ளது.

முன்னைய உடன்பாடு போல காலவரையறை ஒன்றை இந்தப் புதிய உடன்பாடு கொண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. 180 நாள்கள் முன்னறிவித்தல் கொடுத்து இதில் இருந்து விலக்கிக் கொள்ளும் விதிமுறையும் சேர்க்கப்படும்.

உடன்பாடு வரையப்பட்ட பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பாக விவாதமும் நடத்தலாம். அணிசேரா கொள்கையை விட்டு எமது வெளிவிவகாரக் கொள்கை விலகிச் செல்லாது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## சிறுபான்மையினர் மீது தாக்குதல்: 15 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் 15 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் தொடர்பில் 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன், அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

## ஐ.நாவில் கோரிக்கை விடுத்தார் கணவனைத் தேடும் மனைவி!

கொழும்பு, ஜூன் 23

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்கத் தகுந்தவர்களை மனித உரிமை ஆணைக் குழுவில் நியமிக்க வேண்டும் என அருள்வதனா சுந்தரராஜ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஜெனீவாவில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், இலங்கையில் நீதியை நிலைநாட்ட மனித உரிமை ஆணைக்குழு விஷேட அலுவலகங்களை அமைத்து அதன் மூலமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தெளிவான விசாரணைகளை முன்னெடுக்க வழிவகுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவர் இலங்கையில் யுத்தம் காரணமாகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மதுபான விற்பனை: பொத்துவிலில் 3 பேர் சிக்கினர்!



பொத்துவில்,ஜூன் 23

மட்டக்களப்பு - பொத்துவில் பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதிகளில் பல லட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத மதுபானங்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மதுவரி அதிகாரிகள் இணைந்து நேற்று வியாழக்கிழமை காலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின்போதே, மேற்படி மதுபானங்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து, அவர்கள் பொத்துவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ச)

# கிழக்கு மாகாணத்தில் தரம் 5 முன்னோடி வினாத்தாளில் தவறு!

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சை வினாத்தாளில் பல்வேறு தவறுகள் காணப்பட்டன என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட பரீட்சையிலேயே மேற்படி தவறுகள் இடம்பெற்றுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவறுகள் மற்றும் குழப்பங்களுடன் மேற்படி பரீட்சை வினாத்தாள்கள் காணப்பட்டமையால் மாணவர்கள் பல்வேறு சங்கடங்களை எதிர்கொண்டனர் எனப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோ.சைக்கிள் மோதி 2 பேர் சாவு

## திருமலை — கந்தளாய் வீதியில் சம்பவம்

திருகோணமலை,ஜூன் 23

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதி பாலம் போட்டாறுப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில், முள்ளிப்பொத்தானை 98 ஆம் கொலணி அரபா நகரைச் சேர்ந்தவர்களான அப்துல் ரஊப் சுஜான் (வயது -28), நஹீர் முஹம்மட் (வயது -20) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

திருகோணமலை நகரிலிருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த மேற்படி லொறிச் சராதி, பாலம் போட்டாறுக் கோவிலுக்கு முன்பாக லொறியை நிறுத்தி வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். அப்போது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதியுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நஹீர் முஹம்மட் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றயவர் படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# அரச காணிக்குள் அத்துமீறிய இருவர் கைதாகினர்!

மருதமுனை, ஜூன் 23

மருதமுனை மக்பூலியா கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச காணி ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்த இருவரை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸார் கைதுசெய்தனர்.

மக்பூலியா கடற்கரைப் பிரதேசத்தில் 65 மீற்றருக்குள் உள்ள பிரதேசத்தில் எந்தவித அபிவிருத்திப் பணிகள்மற்றும் கட்டுமான வேலைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று அரசு தடை செய்துள்ளது. இந்தத் தடையை மீறி, மேற்படி காணிக்குள் பிரவேசித்து, மண் நிரப்ப முற்பட்டமையாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட புல்டோஸர்மற்றும் லொறி ஆகியன கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச)

# கிழக்கு மாகாணத்தை மு.காவே ஆட்சி செய்யும்!

## முதலமைச்சர் நஸீர் சூளுரை



அக்கரைப்பற்று,ஜூன் 23

கிழக்கு மாகாணத்தை முஸ்லிம் காங்கிரஸ்தான் ஆட்சிசெய்யும். அதற்கான திராணியும் மக்கள் ஆதரவும் எமக்கே உள்ளன.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றுக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இப்தார் நிகழ்வு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் காங்கிரஸை எவராலும் அழிக்க முடியாது என்பதைக் கடந்தகால வரலாறுகள் மூலம் அறிந்துகொள்ள முடியும். இந்தக் கட்சியை அழிக்க முற்பட்டபலர், தற்போது முகவரி தெரியாதவர்களாக மறைந்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விரட்டப்பட்டவர்கள் செய்வதறியாது கூட்டணி என்றும், வேறு சக்திகளின் பின்னணியிலும் செயற்பட்டு வருகின்றனர்.

அடுத்துவரும் தேர்தல் மூலம் முஸ்லிம் காங்கிரஸின் பலத்தையும், அசைக்க முடியாத மக்கள் ஆதரவையும் அனைவரும் அறிவர். முஸ்லிம்களின் ஏகோபித்த கட்சியாகக் காணப்படும் முஸ்லிம் காங்கிரஸை, அழிக்கவோ அல்லது அதன் சக்தியை இல்லாமல் செய்யவோ ஒருபோதும் மக்கள் துணைபோகமாட்டார்கள் . -என்றார். (ச)

# கிழக்குப் பல்கலை திருமலை வளாகத்தில் யோகா நிலையம்!

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் யோகா வள நிலையம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை வளாகத்தைச் சேர்ந்த கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் நன்மை கருதி இந்த யோகா வள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் தினந்தோறும் காலை, மாலை வேளைகளில் இந்த நிலையத்தில் யோகா பயிற்சி நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# துறைநீலாவணையில் டெங்குக் காய்ச்சல்!

களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணைப் பகுதியில் டெங்குக் காய்ச்சலால் இருவர் பாதிக்கப்பட்டுள்ளனர். துறைநீலாவணையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரத்தப் பரிசோதனை மேற்கொண்டனர். அதன்போதே அங்கு இருவர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. தற்போது அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

# பெரியகல்லாற்றில் டெங்கு ஒழிப்பு !





பெரியகல்லாறு, ஜூன் 23

மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் உள்ள ஆறு கிராம சேவகப் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.

மண்முனை தென் எருவில் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், உதவி செயலாளர் சத்தியகௌரி, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கிருஸ்ணகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரவியராஜா, சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் , களுவாஞ்சிக்குடிப் பொலிஸார், ஒந்தாச்சி மடம் இராணுவ முகாம் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ச)

# நற்குணம் உள்ள பெரும்பான்மையினராலேயே முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்!

## தேசிய காங். தலைவர் அதாவுல்லா தெரிவிப்பு

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்களில் 98 வீதமானவர்கள் மிகவும் நற்குணம் படைத்தவர்களாகவும் உள்ளனர். அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்பினாலேயே, முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டது.

-இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அல்-இப்றா கலாசார மன்றத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு, பாலத்தடி முன்றிலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் உள்ள பௌத்த மக்களும், சிறுபான்மை இன மக்களும் மிகவும் ஒற்றுமையாகவும், சகோதர பாசத்துடனும் வாழ்ந்து வந்த வரலாறுகள் உள்ளன. ஆனால், தற்போது இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் மற்றும் அரசியல் பிரிவினை போன்றவற்றை ஏற்படுத்தி, இந்த நாட்டைப் பிரித்துச் சின்னாபின்னாப்படுத்த உலக நாடுகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

முஸ்லிம்களுக்கு இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் ஆபத்தான நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்துக்கு நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தினால், முஸ்லிம்கள் பலமடைந்துவிடுவார்கள் என்பதற்காகவே யூதர்கள் இஸ்லாத்தில் பிரிவினையை ஏற்படுத்தினர்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்து வரும் அரபு நாடுகள் உள்ளன. ஆனால், எந்தவொரு நாடும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்பதற்கு முன்வருவதில்லை -என்றார். (ச)

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள மகாநாயக்க தேரரின் அறிக்கை!

கொழும்பு, ஜூன் 23

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண. வராகொட ஞானரத்ன தேரர் உள்ளிட்ட அஸ்கிரிய பீடத்தின் அண்மைய அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கக் கூடாது என ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வண. தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் எதிர்நோக்கி வரும் சவால்கள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர் தலைமையிலான அஸ்கிரியபீடம் கடந்த 20 ஆம் திகதி கடுமையான தொனியில் அறிக்கை வெளியிட்டிருந்தது.

பௌத்த பிக்குகள் இழிவுபடுத்தப்படக்கூடாது எனவும் வண. கலதொடத்தே ஞானசாரதேரரின் கருத்தையும் செவிமடுக்க வேண்டும் எனவும் சிங்கள, பௌத்தர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு சவால்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கக் கூடாது எனத் வண. தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அஸ்கிரிய பீடாதிபதி வெளியிட்ட அறிக்கை போன்ற அறிக்கைகள் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றவை. போரால் பாதிக்கப்பட்ட எமக்கு தற்போது தேவை நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலான விடயங்களாகும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேவை ஏற்பட்டால் பொய்யேனும் சொல்வதில் தவறில்லை. நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தாது அதனை மேம்படுத்துவதற்கு உண்மையையும் பொய்யையும் பேசினாலும் பிரச்சினையில்லை.

வண. ஞானசார தேரரின் செயற்பாடுகள் பொருத்தமுடையவை அல்ல; அதனை பௌத்தம் கற்பிக்கவில்லை. பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு புத்தபெருமானை பெருமைக்குள்ளாக்க முடியாது.

பௌத்தமத கொள்கைகளை, கோட்பாடுகளை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது. பல்வேறு காரணங்களால் கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன.

மத மற்றும் தேசியத் தலைவர்கள் கருத்து வெளியிடும்போது மிகவும் நிதானமாக கருத்து வெளியிட வேண்டும்.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது. மகாநாயக்க தேரர்கள் நிதானமாகச் செயற்படாவிட்டால் அது, அவர்களது கௌரவத்தை அவர்களே அழித்துக் கொண்டதாகிவிடும்.

அனைத்து இன மற்றும் மத மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்த நாட்டை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.- எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை நாணய மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி!



கொழும்பு, ஜூன் 23

வரலாற்றில் முதல் முறையாக, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 155 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள வங்கிகளுக்கு இடையிலான வெளிநாட்டு நாணயக் கொள்வனவு, விற்பனைப் பட்டியலில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி, 155.01 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு பெறுமதி, 151.21 ரூபாவாக இருக்கிறது.

இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையிலேயே, அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி, வரலாற்றில் முதல்முறையாக 155 ரூபாவைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வயதில் மூத்த பெண்ணை மயக்க மந்திரவாதியாக மாறிய காதலன்!

வயது மூத்த பெண்ணின் காதலைப் பெறுவதற்காக அவரைக் கடத்திச்சென்று இரவு முழுவதும் வசியம் செய்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். 24 வயதுடைய இளம் பெண் ஒருவரைக் கடத்திசென்று இரவு முழுவதும் வசியம் செய்த 21 வயதுடைய இளைஞர் தொடர்பில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்த இளம் பெண் தொழிலுக்காக கொழும்பிற்கு சென்றுள்ள நிலையில் கொழும்பில் உள்ள பிரதேசம் ஒன்றில் தங்கியுள்ளார்.

தொழிலுக்குச் செல்லும் போது அந்தப் பெண் சம்பந்தப்பட்ட இளைஞரைச் சந்தித்துள்ளார். சிறிது காலம் செல்லும் போது இருவரும் காதலில் சிக்கியுள்ளனர்.

நிரந்தர தொழில் இல்லாத இளைஞர் அந்த பெண்ணிடம் தொடர்ந்து தங்க நகைகளை பெற்று அடகு வைத்துள்ளார். இந்தச் செயற்பாடு தொடர்ந்த நிலையில், தனது காதலை முறித்துக் கொள்ள அந்தப் பெண் தீர்மானித்துள்ளார்.

காதலியின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாத இளைஞர் மந்திரவாதி ஒருவரைச் சந்தித்து அவரிடம் ஆலோசனை பெற்றுள்ளார்.

அந்த மந்திரவாதியின் ஆலோசனையை பெற்ற இளைஞர், தனது காதலியான அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்று தேசிக்காய் வெட்டி வசியம் செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அறிந்து கொண்ட பொலிஸார், சம்பந்தப்பட்ட இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

# கட்டாரில் உள்ள இலங்கையர்களை வெளியேற்றும் அவசியம் இல்லை!

கொழும்பு, ஜூன் 23

கட்டாரில் பணியாற்றும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் இலங்கையர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றும் திட்டம் எதுவும் இல்லை என்று இலங்கையில் உள்ள கட்டார் தூதரகம் தெரிவித்துள்ளது.

எனவே, கட்டாரில் உள்ள இலங்கையர்கள் பிழையான வழியில் சென்றுவிடக்கூடாது என்றும் தூதரகம் கோரியுள்ளது.

இலங்கையர்களைப் பொறுத்தவரை கட்டார் அவர்களின் இரண்டாவது வீடாகவே கருதப்படுகிறது.

இந்தநிலையில் இலங்கையின் வெளியுறவு அமைச்சு மற்றும் டோகாவில் உள்ள இலங்கை தூதரகம் என்பன இலங்கையர்கள் கட்டாரில் பிரச்சினைகள் இன்றி தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதை உறுதிப்படுத்தியுள்ளன எனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தி பஹ்ரெய்ன், சவூதி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யேமன் என்பன கட்டாருடனான உறவுகளை கடந்த மாதம் துண்டித்துக்கொண்டன.

இதனையடுத்து எழுந்துள்ள சூழ்நிலை தொடர்பில் கட்டார் தூதரகம் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

## குப்பைகள் மூலம் மின்சாரம்!

கொழும்பு, ஜூன் 23

வடமேல் மாகாணங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளில் மின்சாரம் தயாரிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.


இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு DAIICHI LAIHTSO GROUP என்ற ஜப்பான் நிறுவனம் முன்வந்துள்ளது.

# மொரகஹகந்த நீர் மின்னுற்பத்தி நிலைய ஆய்வு நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி!

மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து ஆய்வு நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

தேசிய மின்கட்டமைப்புக்கு 25 மெகாவேட்ஸ் கொள்ளளவுடைய மின்சாரத்தை சேர்க்கக் கூடிய இந்த நீர்மின்னுற்பத்தி நிலையமே இலங்கையில் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின்னுற்பத்தி நிலையமாகும்.

எதிர்வரும் மழைக் காலத்துடன் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்ததன் பின்னர் அதன் மின்னுற்பத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆரம்பிக்க முடியுமென்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். மொரகஹகந்த நீர்த்தேக்கத்துடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ள இந்த நீர் மின்னுற்பத்தி நிலையத்தில் நீரின் அழுத்தத்தினால்



இயங்கும் நான்கு மின்சுழலிகளின் மூலமாக மின்னுற்பத்தி செய்யப்படவுள்ளது.

7.5 மெகாவோட்ஸ் மின்சுழலிகள் இரண்டு மற்றும் 5 மெகாவோட்ஸ் மின்சுழலிகள் இரண்டும் கொண்டதாக இந்த மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

7.5 மெகாவோட்ஸ் மின்சுழலிகளின் இயக்கத்தின் பின்னர் வெளியேற்றப்படும் நீர் மேல் எலஹெர கால்வாயினூடாக மஹகனதராவ, நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு செல்லப்படுவதுடன், 5 மெகாவோட்ஸ் மின்சுழலிகளின் இயக்கத்தின் பின்னர் வெளியேற்றப்படும் நீரானது அம்பன் கங்கைக்கு வெளியேற்றப்பட்டதன் பின்னர் பழைய எலஹெர கால்வாயினூடாக கிரித்தலை, மின்னேரிய, கவுடுல்ல மற்றும் கந்தளாய் நீர்த்தேக்கங்களுக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மத முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சி

### குற்றம் சுமத்துகிறது பொதுபலசேனா

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் மத முரண் பாடுகளை ஏற்படுத்து வதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முயற்சிக்கின்றன என்று பொது பலசேனா இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்:-

'வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு இவ்வாறு சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மகா சங்கத்தினர் மற்றும் பௌத்த சாசனத்துக்குஇழிவைஏற்படுத்தும் முயற்சியில் இந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன .

ஞானசார தேரருக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் நாட்டின் ஏனைய தரப்பினருக்கு எதிராகவும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலையை கருத்திற் கொண்டு அமைதியாக இருக்க முடியாது,-என்றது. (எ)

## தினசரி ராசி பலன் 23.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 9 ஆம் நாள் சதுர்த்தசித்திதி பகல் 11.50 மணி வரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம்: ரோகிணி காலை 7.48 மணி வரை. அதன் மேல் மிருகசீரிடம் பி.இ. 4.49 மணி வரை. பின்னர் திருவாதிரை. மரணயோகம் காலை 7.48 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 10.37 மணி முதல் 12.12 மணி வரை. சுபநேரம்: மாலை 5.57 மணி முதல் 7.27 மணி வரை. இன்று அமாவாசை விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி ஆனிமாத தேய்பிறை சதுர்த்தசி - அமாவாசை. பிறந்த நட்சத்திர வழிபாடு: மிருகசீரிடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். சுபகாரியத் தடைகள் விலகும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டு வர்த்தகம் ஆதாயம் தரும்.

**ரிஷபம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. புதுவரவும், உறவும் மகிழ்ச்சி தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**மிதுனம்:** குழப்பமான நாள். பணக்கஷ்டங்கள் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் பாதிப்படையும். வேலை பார்க்கும் பெண்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

**கடகம்** : யோகமான நாள். பணவருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் பலனளிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அந்தஸ்தில் உயர்வு அதிகரிக்கும்.

**சிம்மம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. மனத்தடுமாற்றம் உண்டாகும். அலைச்சல்கள் அதிகரிக்கும். பெண்களுக்கு விவாக முயற்சிகள் தடைப்படும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. சிலருக்கு பதவி உயர்ச்சிகள் போன்ற வாழ்க்கைச் சிறப்புகளும் உண்டாகும். தொழிலாளர்களுக்கு வருவாய் அதிகரிப்பு மூலம் வாழ்க்கைத்தரம் உயரும்.

**துலாம்** : கவலையான நாள். குடும்பத்தில் அமைதிக்குறைவுடன் வாக்கு விரோதங்களும், பிணக்குகளும் நிகழும். உத்தியோகத்தர்களுக்கு கடன் பளு ஏறும்.

**விருச்சிகம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. எவ்விஷயத்திலும் தடை, தாமதங்கள் ஏற்படும். தொழிலாளர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு** : யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேல்திகாரிகளின் உதவியால் பதவி உயர்ச்சிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துகள் கைக்கு வந்து சேரும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் முன்னேற்றம் கிடைக்கும். வியாபாரம் வளமாக நடைபெறும்.

**கும்பம்:** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். நெருங்கிய உறவினர்களுக்கு கருத்துவேற்றுமை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**மீனம்** : விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நல்லுறவு வளரும். வியாபாரம் நல்விருத்தி அடையும். தொழிலாளர்களுக்கு பொருள் வருவாயும் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டால் சொந்த மண்ணை ஆள முடியும்!

### இவ்வாறு கூறுகிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்



தமிழர்கள் தமது சொந்த மண்ணை ஆளக்கூடிய சூழ்நிலை ஏற்பட தமிழ்த் தலைமைகள் தமக்குள் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பண்குடாவெளி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள முதலமைச்சர் தொடர்பான நிலைமை காரணமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் குள் எந்தவிதமான பிளவுகளும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதே எனது கருத்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரித்துவிட வேண்டும் என்பதில் இனவாதிகள் பலரும் மிகவும் உன்னிப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். அதற்கு ஒரு போதும் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் ஆகிய இருவரும் விடயங்களை நன்கு தெரிந்தவர்கள்.

அவர்கள் இருவருக்கும் இடையில் ஒற்றுமை ஏற்பட்டு தமிழர்கள் தமது சொந்த மண்ணை ஆளக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமே தவிர, பிரிந்து மாகா ணத்தை சின்னாபின்னமாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தவிர்க்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் அனைவருக்கும் உண்டு. அதை நாங்கள் சரியான முறையில் கையாள வேண்டும்.-என்றார். (எ)

### ஜப்பான் தூதுவர்—பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக சுமுகமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

## யோகா தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

மூன்றாவது சர்வதேச யோகாதினம் நாளை சனிக்கிழமை ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யம் கனகராயன்குள ஆச்சிரம வளாகத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் சின்மயா மிஷன் யாழ்ப்பாணக் கிளையின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத்சைசைதன்யா அருளாசி வழங்கி சிறப்புரையாற்றவுள்ளார்.

விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத்துணை தூதரகத்தின் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய பொன் விழா நிகழ்வு நாளை



### முதலாம் நாள் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் பொன் விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சேவா நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.


முதல் நாள் நிகழ்வுகளாகக் கொடியேற்றம், பஜனை, வரவேற்புரை, வரவேற்பு நடனம் என்பனவற்றைத் தொடர்ந்து ஆசியுரையை இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் உதவி மத்திய இணைப்பாளர் வைத்தியர் வி.ஜெயநாதனும், விசேட அதிதி உரையை தமிழ் நாடு மாநில இளைஞர் அணித் தலைவர் ஸ்ரீ.வி.விஜயகிருஷ்ணனும் வழங்குவர்.

தொடர்ந்து பொன்விழா மலர் வெளியீடு, இறுவட்டு வெளியீடு என்பனவற்றை தொடர்ந்து பஜனை, மதிய போசனம் என்பன இடம் பெறும்.

மாலை நிகழ்வுகளாக ப.சியாம் கிருஷ்ணாவின் வயலின் இசை, பஜனை, பாலா விகாஸ் மாணவர்களின் இறை சங்கல்பம், நாட்டிய நாடகம், இராப்போசனம் என்பன இடம் பெறும். (ச)

# துரிதமாக உவரடைந்து வரும் ஆனைவிழுந்தான் கிராமங்கள்

## தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்கள் துரிதமாக உவரடைந்து வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று இரு கிராம மக்களாலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்ததன் தொடர்ச்சியாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்கள் முழுமையாக உவரடையும் ஆபத்தை எதிர் கொண்டுள்ளன. கடந்த ஏழாண்டுகளாக கிராம மட்டத்திலும் கரைச்சிப் பிரதேச செயலகத்திலும் மாவட்ட செயலகத்திலும் நடை பெற்ற கூட்டங்களில் தமது கிராமங்களை உவர் ஆபத்தில் இருந்து காப்பாற்றுமாறு கிராமங்களில் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மண்டைக்கல்லாறு வழியாக கடல் நீர் உட்புகுவதன் காரணமாக வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் கிராமம் முழுமையாக உவரடைந்து அந்தக் கிராமத்தில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. அத்துடன் கிராமத்தில் இயங்கிய குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம் மூடப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் வழியாக ஆனைவிழுந்தான் மேற்கு வரை பரவிய உவர் நீர் காரணமாக நன்னீர் கிணறுகள் எல்லாம் உவர் நீராக மாறி தென்னை, பலா போன்ற பயன்தரு மரங்கள் அழிவடைந்து வருகின்றன. குஞ்சுக்குளத்தின் அணைக்கட்டு இருப்பதன் காரணமாக வன்னேரிக்குள மகா வித்தியாலய சூழலில் உவர் நீர் பரம்பல் தடுக்கப்பட்டுள்ள போதிலும் ஆனைவிழுந் தான் மேற்கில் பரவியுள்ள உவர் நீர் வன்னேரிக் குளத்தின் ஐயனார்புரம், இரண்டு ஏக்கர் ஆகிய பகுதிகளை உவர் நீர் பரம்பல் ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகியுள்ளது.

இந்தநிலையில் மாவட்டத்தின் இந்த முக்கியப் பிரச்சினை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட்டது. எனினும் இதுவரை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மண்டைக்கல்லாறு வழியாக பரவும் உவர் நீரைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நட வடிக்கை எடுக்காவிட்டால் இரு கிராமங்களும் முழுமையாக உவரடைந்து எதிர்காலத்தில் அந்தக் கிராமங்களில் இருந்து ஆயிரம் வரையான குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய அவல நிலை உருவாகும்.

1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தில் தற்போது ஐந்நூறு வரையான குடும்பங்களும் 1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கிராமத்தில் ஐந்நூறு வரையான குடும்பங்களும் வசித்து வருகின்றன. இந்த நிலையில் உவர்ப் பரம் பலால் அந்த இரு கிராமங்களும் முழுமையாக அழிவடைந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பூநகரி பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் உவர் நீர்ப்பரம்பல் ஏற்படுகின்றது என்று 2000 ஆம் ஆண்டு மக்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கான தடுப்பு முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையில் தமிழர்களின் பூர்வீக நிலமான பல்லவராயன்கட்டுக் கிராமம் முழுமையாகத் தற்போது உவரடைந்துள்ளது.

(எ)

## மூத்த ஊடகவியலாளர் குகனுக்கு 'நவயுக நக்கீரன்' பட்டமளிப்பு



புலம்பெயர்ந்து வாழும் மூத்த ஊடகவியலாளர் ஞா. குகநாதன் அவர்கள் ஊடக சேவையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழா சுவிஸ் - சென் மாக்கிறத்தன் நகரில் அண்மையில் நடைபெற்றது. சென் மாக்கிறத்தன் கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இந்த விழா ஆலய மண்டபத்தில் தலைவர் வே. கணேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

யாழ். 'உதயன்' பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியருமான ஞா. குகநாதன் 15 வயதில் ஊடகப் பணியை ஆரம்பித்தவர். 'ஈழமுரசு', 'உதயன்' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களில் பணியாற்றிய இவர், 'ஈழநாடு', 'தினபதி', 'ஈழமுரசு', 'உதயன்' ஆகிய பத்திரிகைகளில் பிராந்திய நிருபராகவும் பணியாற்றினார். தனது பணிக் காலத்தில் பல இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கியவர்; பல ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கியவர்.

போர்ச் சூழல் காரணமாக பல ஊடகவியலாளர்கள் புலம்பெயர்ந்த போதிலும் தான் பிறந்த மண்ணை விட்டு அகலுவதில்லை என்ற விடாப்பிடியான கொள்கையுடன் செயற்பட்டு வந்த அவர், பல சந்தர்ப்பங்களில் கொலை முயற்சியில் இருந்து தப்பியிருந்தார். அவர் மீதான கொலை முயற்சி யுத்தம் முடிவுற்ற காலத்திலும் தொடர்ந்ததை அடுத்து, கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சுவிஸ் நாட்டிற்கு அவர் புலம் பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சுவிஸ் நாட்டில் வாழும் குகநாதன் அவர்களின் 50 ஆவது வருட ஊடகப் பணியைப் பாராட்டி அவருக்கு 'நவயுக நக்கீரன்' என்ற பட்டம் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தின் இயக்குநர் ச.வி. கிருபாகரன், மூத்த ஊடகவியலாளர்களான இராதுரைரெத்தினம், சண்.தவராஜா, விடுதலைப் புலிகள் ஏட்டின் முன்னைநாள் ஆசிரியர் ரவீந்திரன் (ரவி), சுவிஸ் 'உதயதாரகை' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் லொசான் மாநகரசபை உறுப்பினருமான தம்பிப்பிள்ளை நமசிவாயம், விடுதலைப் புலிகளின் முன்னாள் சுவிஸ் பொறுப்பாளர் செ. குலம், சுவிஸ் தமிழ்க் கல்விச் சேவை அமைப்பின் பொறுப்பாளர் க.பார்த்திபன் ஆகியோர் உட்படப் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

## மன்னார் மாணவிக்கு கௌரவிப்பு!

மன்னார், ஜூன் 23

தமிழ்ப் பிரிவுப் பாடசாலைகளுக்கு இடையே இடம் பெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் 2ஆம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்ட மாணவி செலஸ்டின் அஜென்டினாவுக்கு பாடசாலையில் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் அந்த மாணவியை பாராட்டி வரவேற்கும் வகையில் மேற்படி மகா வித்தியாலய பாடசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்த வரவேற்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையில் இடம் பெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் உட்பட அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மாணவியைக் கௌரவித்துள்ளனர்.



## வடமராட்சி கிழக்கு எழுத்தாளர்களிடமிருந்து கவிதை, சிறுகதை ஆக்கங்கள் கோரப்படுகின்றன

வடமராட்சி, ஜூன் 23

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கலாசாரப் பேரவை, பிரதேச எழுத்தாளர்களது இலக்கிய முயற்சிகளை எழுத்துருவில் வெளிக்கொண்டு வரும் நோக்கில், வடமராட்சி கிழக்குப் பிரதேசம் மற்றும் புலம்பெயர் எழுத்தாளர்கள் ஆகியோரிடம் இருந்து, கவிதை, சிறுகதை போன்ற ஆக்கங்களைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிடத் தீர்மானித்துள்ளது. இந்தத் தொகுப்புக்காகக் கவிதை மற்றும் சிறுகதைகளை அனுப்ப விரும்புபவர்கள் கீழ்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வடமராட்சி கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் அல்லது வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த புலம்பெயர் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்க முடியும். ஒருவர் கவிதை, சிறுகதை என இரண்டையும் அனுப்பி வைக்க முடியும். ஆனால், இரண்டிலும் ஒவ்வொன்றை மட்டும் அனுப்பி வைக்க முடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் அவருடைய சொந்த ஆக்கங்களாக இருக்க வேண்டும். ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆக்கங்களாக இருக்கக்கூடாது. ஆக்கங்கள் அரசியல் கலப்பற்றனவாகவும் வேறு ஒருவருடைய பிரச்சினைகளை நேரடியாகச் சுட்டிக் காட்டாதனவாகவும் இருக்க வேண்டும். கவிதையாயின் மரபுக் கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் படைப்பாளிகள் ஆக்கங்களை எழுதி அனுப்பி வைக்கலாம்.

மரபுக் கவிதையை A4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறும், புதுக் கவிதையை A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல், 12 எழுத்துரு அளவில் தட்டச்சுச் செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

தெரிவுக் குழுவால் தரமானது எனத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மட்டுமே பிரசுரமாகும்.

ஆக்கங்களை ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். ஆக்கங்களை செயலாளர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், மருதங்கேணி என்னும் முகவரிக்கோ அல்லது dsep.mrk@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

ஆக்கங்களுடன் எழுதுபவரின் முழுப் பெயர், புனைபெயர் , நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, தொலைபேசி இலக்கம், தமது கலையுலக வாழ்க்கை பற்றிய சுருக்கக் குறிப்பு, கடவுச்சீட்டு அளவுப் புகைப்படம் என்பவற்றை இணைத்து அனுப்பி வைக்க வேண்டும் என வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ச)

பொன்.வேணு கிருஷ்ணா




## புவியரசியல் ஒழுங்கமைப்பின் நெருக்கடி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா சுற்றுப்பயணத்தை முடித்து விட்டுத் திரும்பி இன்னும் ஒரு வாரம் கூட ஆகியிராத நிலையில், உலக அரசியலில் பரந்த தாக்கங்களுடனான ஒரு மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாய் இருக்கிறது. பல தசாப்தங்களாய் சர்வதேச பொருளாதாரத்திற்கும் பொது வாழ்விற்கும் கட்டமைப்பைத் தீர்மானித்த உலகளாவிய உறவுகளும் நிறுவனங்களும் துரிதமாக கட்டுச்சிதறிக் கொண்டிருக்கின்றன.

வர்த்தகப் போரின் அச்சுறுத்தல் அதிகரிப்பதும் அத்தனை ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இராணுவ அபிலாஷைகள் மீண்டும் எழுந்திருப்பதும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மேலாதிக்க ஏகாதிபத்திய சக்தியாக அமெரிக்கா எழுந்ததன் பின்னர் உருவாக்கப்பட்டிருந்த சர்வதேச நிறுவனங்களின் உடைவு முன்னேறிய கட்டத்தில் இருப்பதன் அறிகுறிகளாய் அமைந்திருக்கின்றன.

இந்த நிலைகுலைவு பல தசாப்த காலங்களில் முதிர்ச்சியடைந்திருந்த நிகழ்ச்சிப்போக்குகளின் விளை பொருளாய் இருந்தது

1991 இல், சோவியத் ஒன்றியம் ஸ்ராலினிசத்தால் கலைக்கப்பட்டமையானது நேட்டோ கூட்டணிக்கு ஒரு பொது எதிரியை இல்லாது செய்த சமயத்தில்,ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான பதற்றங்கள் ஏற்கனவே அதிகரித்துக் கொண்டிருந்தன. அமெரிக்க மூலோபாயவாதிகள், சோவியத் ஒன்றியம் இல்லாமல் போன தால் எந்த உடனடியான இராணுவப் போட்டி நாடும் இல்லாத ஒரு " ஒற்றைத் துருவ தருணத்தை அறிவித்த போது, அமெரிக்காவின் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த பொருளாதார நிலையை ஈடுசெய்வதற்கு இந்த இராணுவ அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் நோக்கம் கொண்டிருந்தனர்.

1992 ஆம் ஆண்டின் பென்டகன் மூலோபாய ஆய்வறிக்கை ஒன்று, அமெரிக்கா, "போட்டியாக வர்த்தக நாடுகளுக்கு அவை பெரியதொரு பாத்திரத்தை வகிக்க ஆசைப்படுவதற்கோ அல்லது ஒரு மேலதிக மூர்க்கமான நிலைப்பாட்டை பின்பற்றுவதற்கோ அவசியமேதும் இல்லை" என்பதில் நம்பிக்கையூட்ட வேண்டும், அத்துடன் "நமது தலைமையை சவால் செய்வது அல்லது ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கை மாற்றுவதற்கு முனைவது ஆகியவற்றில் அவர்களுக்கு ஊக்கமிழக்கும்படி செய்ய வேண்டும் என்று திட்டவட்டம் செய்தது.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய போட்டி நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய மேலாதிக்கத்திற்கு நேரடியான, தொலைநோக்கு தாக்கங்கள் கொண்ட சவால்களை முன்நிறுத்த தயாரிப்பு செய்து கொண்டிருக்கின்றன.

கால் நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர், இந்த கொள்கையானது தோல்வி கண்டிருக்கிறது. அந்தக் கொள்கை அமெரிக்காவின் தலைமையில் நேட்டோ சக்திகளின் ஒரு தொடர்வரிசையான ஏகாதிபத்திய போர்கள் மற்றும் தலையீடுகளுக்கு இட்டுச் சென்றிருந்தது. இவை ஈராக், யூகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா, உக்ரேன் மற்றும் பல நாடுகளை துவம்சம் செய்தன. இந்த இராணுவவாத நடவடிக்கைகள் மில்லியன் கணக்கான உயிர்களைக் காவுகொண்டன, ஒட்டுமொத்த சமூகங்களையும் அழித்தன, இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய மாபெரும் அகதிகள் நெருக்கடியை உருவாக்கின, அத்தனைக்குப் பின்னரும் அவை படுதோல்விகளையே உருவாக்கின; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவிதியை மாற்றுவதில் தோற்றன. இப்போது அந்த நெருக்கடியில் ஒரு புதிய கட்டம் எட்டப்பட்டிருக்கிறது: அமெரிக்காவின் ஏகாதி பத்திய போட்டி நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய மேலாதிக்கத்திற்கு நேரடியான, தொலைநோக்கு தாக்கங்கள் கொண்ட சவால்களை முன்நிறுத்த தயாரிப்பு செய்து கொண்டிருக்கின்றன.



ஜி7 மற்றும் நேட்டோ உச்சி மாநாடுகளில் ஐரோப்பாவிடம் இருந்து மேம்பட்ட பொருளாதார உடன்பாடுகளைப் பெறுவதற்கு ட்ரம்ப் செய்த முயற்சிகள் திருப்பித்தாக்கின. நேட்டோ கூட்டணியில் இராணுவ செலவினத்திற்குச் செலுத்த வேண்டிய அளவுக்கு தொகை செலுத்தாதவர்கள் என ஐரோப்பியர்களைக் குறை கூறிய ட்ரம்ப் ஜேர்மனியை படுமோசமானது என்று கண்டனம் செய்ததோடு அமெரிக்காவுக்கான ஜேர்மன் கார் ஏற்றுமதியை நாங்கள் நிறுத்துவோம் என்றும் சேர்த்துக் கூறினார். ஆனால் ஐரோப்பா விடம் இருந்து பதிலிறுப்பாக அனுதாபமும் நிதி உதவியும் வரவில்லை, மாறாக உட்கண்ட ஐரோப்பிய சக்திகள் அமெரிக்காவுடன் அரசியல் ரீதியாகவும் இராணுவரீதியாகவும் முறித்துக் கொள்வதற்குத் தயாரிப்பு செய்து கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வரிசையான நடவடிக்கைகள் தான் வந்தன.

"நாம் மற்றவர்கள் மீது நம்பியிருந்த காலம் குறிப்பிட்ட மட்டத் திற்கு முடிந்து விட்டது என்பதை கடந்த சில தினங்களில் நான் அனுபவ பூர்வமாய்க் கண்டேன். ஐரோப்பியர்களாகிய நாம் உண்மையாகவே நமது தலைவிதியை நமது சொந்தக் கைகளில் எடுத்தாக வேண்டும்."

முனீச் பீர் கூடார பேரணியில் பேசிய ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்கெல், உச்சிமாநாடுகளில் ட்ரம்ப் நடந்து கொண்டவிதம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற பிரிட்டன் வாக்களித்தமை இரண்டையும் குறிப்பிட்டார்: "நாம் மற்றவர்கள் மீது நம்பியிருந்த காலம் குறிப்பிட்ட மட்டத்திற்கு முடிந்து விட்டது என்பதை கடந்த சில தினங்களில் நான் அனுபவ பூர்வமாய்க் கண்டேன். ஐரோப்பியர்களாகிய நாம் உண்மையாகவே நமது தலைவிதியை நமது சொந்தக் கைகளில் எடுத்தாக வேண்டும். "முன்னோக்கிச் சென்று, "நமது எதிர்காலத்திற்காக நாமே தான் போராடியாக வேண்டும்" என்று அவர் மேலும் சேர்த்துக் கொண்டார்.



மேர்க்கெலின் வசனம் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் 1949 இல் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நேட்டோ இராணுவக் கூட்டணியில் ஒரு ஆழமான நெருக்கடியை பிரதிபலித்தது என்பதை கடந்த வாரத்தில் ஐரோப்பாவில் நடந்த நிகழ்வுகள் ஊர்ஜிதம் செய்தன. ட்ரம்ப்பின் கீழ், அமெரிக்கா தன்னை "மேற்கத்திய சமூகத்தின் விழுமியங்களுக்கு வெளியே நிறுத்திக் கொண்டிருப்பதாக ஜேர்மன் வெளியுறவு அமைச்சரான சிக்மார் காப்ரியல் அறிவித்தார். இது உலக சக்திகளிடையேயான உறவுகளில் ஒரு மாற்றத்தை சமிக்ஞை செய்ததாக அவர் மேலும் சேர்த்துக் கொண்டார்.

### ஜேர்மனியின் ஒரு நெருங்கிய கூட்டாளியான, புதிதாக தேர்வாகியிருக்கும் பிரெஞ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன்

ஜேர்மனியின் ஒரு நெருங்கிய கூட்டாளியான, புதிதாக தேர்வாகியிருக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், வேர்சாயில் ஒரு உயர்நிலை உச்சிமாநாட்டிற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை அழைத்திருந்தார். ஒரு இணைந்த செய்தியாளர் சந்திப்பில் புடினுக்கு பக்கத்தில் நின்றிருந்த மக்ரோன், சமீப காலங்களின் அத்தனை முக்கியமான அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய தலையீடுகளையும் விமர்சனம் செய்தார். 2014 இல் கியேவில் அமெரிக்க மற்றும் ஜேர்மன் ஆதரவுடன் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பால் உக்ரேனில் தூண்டப்பட்ட மோதலை முடிவுக்குக் கொண்டுவர அழைப்பு விடுத்த அவர், ரஷ்யாவுடன் நெருக்கமான பொருளாதார மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்புக்கும் அழைப்பு விடுத்தார் என்பதுடன் சிரியாவில், டமாஸ்கஸ் நகரில் பிரான்ஸுன் தூதரகத்தை மீண்டும் திறக்கும் சாத்தியத்தையும் உலவ விட்டார்.


அத்துடன் இந்த வாரத்தில், புருசெல்ஸில் ஒரு புதிய ஐரோப்பிய ஒன்றிய இராணுவத் தலைமையகம் செயற்படத் தொடங்கியது. ஐரோப்பிய ஒன்றியம் நேட்டோவுக்கு ஒரு போட்டியாகி விடக் கூடும் என்ற அமெரிக்காவின் அச்சத்தை அடியொற்றி அதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்திருந்த பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறி விட்ட காரணத்தால் இனியும் அது அதனைத் தடுத்து வைக்க முடியாமல் போனது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை






முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

## அத்தியாயம் - 1

### ஆஸ்திரேலியாவில் எனது மூலவேர்கள்

எமது இந்தப் பருவத்தில் நாம் இருவரும் அரசியல் விழிப்புணர்வு கொண்டிருந்தோம்; அரசியற் செயற்பாட்டிலும் ஈடுபட்டோம். ஆனால், எமது அரசியல், உள்நாட்டுப் பிரச்சினைகள் பற்றியதாக அல்லாது அனைத்துலக விடுதலைப் போராட்டங்கள் பற்றியதாகவே இருந்தது. நாம் என்றுமே பிரித்தானியத் தொழிற்கட்சியில் சேரவில்லை. அதன் போராட்டப் போக்கோடும் எமக்குத் தொடர்பு இருக்கவில்லை. பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியோடு கூடி வேலை செய்வதே பிரித்தானியாவில் குறைந்த பட்ச புரட்சி அரசியலில் நாம் ஈடுபடக் கூடியதாக இருந்தது. எப்படியோ, அந்த உறவும் ஆழமானதாக இருக்கவில்லை. சொற்பகாலம் மட்டுமே நீடித்தது. இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணயம் மற்றும் அரசியற் சுதந்திரம் ஆகியவற்றை எதிர்த்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கான சோவியத் யூனியனின் ஆதரவு, இனி மாஸ்கோ எஜமானருக்கு பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சி காட்டிய பற்றுறுதியும், பணிவும் எமது பார்வையிலே பிற்போக்கானதாகப்பட்டது; மன விரக்தியைத் தந்தது; அரசியல் அடிப்படையில் தவறாகவும் தோன்றியது. பிரித்தானிய அரசியலில் எனக்குக் கவலையைத் தந்த முக்கிய விடயம், இங்கிலாந்தில் வளரத் தலைப்பட்ட இனவெறியும், பாசிஸமும்தான். பிற மக்கள் மட்டில் குரோதத்தைத் தூண்டும் தத்துவத்துடன் அமைந்த ஓர் அரசியல் இயக்கத்தினர், தம்மிலிருந்து வேறுபட்ட மக்களைவிட ஏதோ ஒரு வகையில் தாம் உயர்ந்தவர் என்று வலியுறுத்தும் அரசியல் இயக்கமாக வளர்வதைப் பார்த்துக் கொண்டிருக்க எனக்குக் குமட்டியது. உண்மையில் இந்த இனக் குரோதச் சூழல் நேரடியாகவே வாழ்க்கையை அமுக்க முற்பட்டது. அதை என்னால் பொறுக்க முடியவில்லை. இனக்குரோதம் பாலா மீதும் இங்கிலாந்திலுள்ள அவருடைய நண்பர்கள் மீதும் தொடுக்கப்பட, அதைப் பொறுமையோடு பார்த்துக்கொண்டு வாளாவிருக்க வேண்டி இருந்தது. ஒரு சம்பவம்; ஒரு தமிழ் இளைஞர் எம்மைப் பார்க்க வந்து கொண்டிருந்தார். வெள்ளை இன இளம் காடையர் கும்பல் ஒன்று அவரைச் சூழ்ந்து அடித்து நொருக்கியது. முகத்தில் இரத்தம் வழிய, நடுங்கியபடி எமது வீட்டு வாசலுக்கு அவர் வந்தார். பின்னர் எமது வீட்டிலிருந்து வெளியே போக அவர் அஞ்சினார். பாதாள ரயில் நிலையத்துக்கு அவரோடு நாம் கூடிச் சென்றால் மட்டுமே புறப்பட்டுச் செல்ல அவர் இணங்கினார். இதைவிட, இனக்குரோத நேரடி அச்சுறுத்தல் அனுபவமும் கிடைத்தது. ஒருநாள் எமது உயர் மாடி வீட்டில் நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தோம். அங்கு வந்த இனக்குரோத வெள்ளையர் கும்பல் ஒன்று, வாயில் கதவை உடைத்து உள்ளே பாய முயன்றது. பாலாவும், நண்பரும், நானும் கதவைத் தள்ளிப் பிடித்தபடியே காவற்துறையினரைக் கூப்பிடுமாறு காடையர் காதில் விழும் வண்ணம் உரக்கக் கூறி அவர்களை விரட்டினோம்.

வேறின மக்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, அவர்கள் உரிமைகள் பறிக்கப்படும்போது, வேறுபட்ட கலாசாரம் என்பதால் அவமானப்படுத்தப்படும்போது, என்னிடமிருந்த இனவெறியெதிர்ப்புணர்வு விழித்தெழுந்தது. பிரித்தானியாவில் இனவெறி அனுபவம் என்னைக் கொதிப்படையச் செய்தது. ஆனால், பாலாவுக்கு இது வியப்பைத் தரவில்லை. அதை இயல்பானதாகவே எடுத்துக் கொண்டார். தமது நாட்டு இனவெறியோடு அதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிரித்தானியாவில் முகிழ்ந்து வந்த இனவெறித் தத்துவம், தோலின் நிறத்தை அடிப்படையாகக் கொண்டது. இலங்கையிலே, பாலாவின் மக்களுக்கு எதிராகக் கட்டி எழுப்பப்பட்ட இனக்குரோதம், இன மேலாதிக்கம் என்ற மாயையில் கட்டி எழுப்பப்பட்டது. இலங்கையில் நிலவிய இனக்குரோதம் சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்தை அடித்தளமாகக் கொண்டது. இனத்தால் ஆரியர் என்றும், மதத்தால் பூர்வீகப் புனித மதம் என்றும் ஒரு புராணத்துக் கற்பனையில் கட்டப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் குற்றங்களைப் புரிபவர்களில் சிங்கள அரசினரே முதன்மை பெற்றிருந்தனர். இலங்கையின் இனவாதம், இனப்படுகொலைப் பரிமாணத்தை எட்டியது. படுமோசமான மனித உரிமை மீறல்கள் அங்கே நடந்திருக்கின்றன. எழுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் அழித்தொழிக்கப்பட்டிருக்கிறார்கள். பாசிஸம், பேரினவாதம் போன்ற சித்தாந்தங்கள் வரலாறு முழுவதிலும் வெளிப்பாடு கண்டு சிங்கள மக்களை ஒரு மேன்மையான இனம் என்ற மாயைக்குள் சிறைப்படுத்தியது. இந்தக் கருத்தியற்போக்கு மிகவும் ஆபத்தான, கெடுதலான நாசகார சக்தியாகும். இது மும்முரமாக எதிர்க்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து.

தனி ஒருவரையும் சரி, மக்கள் இனங்களையும் சரி நெரித்து ஒடுக்கும் மேலாண்மைத் தத்துவங்களை நான் அருவருத்து ஒதுக்குபவள். ஐரோப்பாவில் நான் மேற்கொண்ட பயணங்களாலும் இங்கிலாந்தில் பல்வேறு இன மக்களிடையே பணிபுரியும் போது கிட்டிய அனுபவங்களாலும் பெற்ற படிப்பினையோடு, எல்லாக் கலாசாரங்களிலும் இருந்து வரும் மக்களை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் அவர்களுக்கு மரியாதை காட்டவும் பயின்றிருந்தேன். எனவே, இனக்குரோத அடிப்படையில், சொல்லாலோ, செயலாலோ மக்கள் தாக்கப்படும் போது என்னால் அதைச் சிறிதும் சகித்துக்கொள்ள முடிவதில்லை. மானுட வரலாற்றின் பரப்பை நாம் அளவிடும் போது, அதில் இனவாதம் ஒரு பெரிய பங்கை வகித்திருப்பதை நாம் காணலாம். மக்களைப் பிளவுபடுத்துவதில் ஒரு முக்கிய சக்தியாகவும், மக்களிடையே மனிதாபிமானம் அற்ற செயல்களுக்கு ஓர் ஊற்றாகவும் அது செயற்படுகின்றது.

மனித சமூகத்தினர், ஒருவர் மட்டில் ஒருவர் கொண்டுள்ள தவறான, எதிர்மறையான கருத்தோட்டங்களிலிருந்தே இனவாதம் தோற்றப்பாடு காண்கிறது. உதாரணமாக, மனிதத் தோலின் நிறம் பற்றிய தவறான பார்வை; மற்றும் போலியான உயர்வு மனப்பான்மை, கலாசார வேறுபாடு, சமயம், வரலாறு போன்ற கருத்தியற் கண்ணோட்டங்களிலிருந்தும் இனவாதம் தோற்றம் கொள்கிறது. எனது வாழ்க்கை அனுபவம் மேலும், மேலும் ஆழம் அடைய, எனது பார்வையில், இந்தப் பூமிக்கிரகமானது அனைத்து மனித சமூகத்தினரதும் பொதுவான வாழ்விடமாகத் தோன்றுகின்றது. மனித இனம் என்ற ஒரே இனத்தினதும், ஏனைய உயிர் வடிவங்களினதும், இயற்கையான வாழ்க்கைத்தளம் இந்த உலகம். இந்த உலகத்தில் வாழ்வதற்கு என்னைப் போலவும், உங்களைப் போலவும், அனைத்து உயிர்களுக்கும் உரிமை உண்டு. பலவகைக் கலாசாரங்கள் மனித சமுதாயத்தைச் செழுமைப்படுத்துகின்றன. ஏனெனில் கலாசாரங்கள், மானுட ஆன்மீக வளர்ச்சியின் வெளிப்பாடுகளாகும். உலகமைந்த அனைத்துக் கலாசாரங்களும் மதிக்கப்பட வேண்டும். அமைதியும், ஒத்திசைவும் வாழ்க்கையில் செழுமையும் நிலவ வேண்டுமானால் கலாசாரங்கள் வளர்ச்சியடைய வாய்ப்பளிக்க வேண்டும். இதுவே எனது கருத்தாகும்.

### போராட்ட அரசியல்

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்கள அரசால் தமிழ் மக்கள் கொடூரமாகவும், அநியாயமாகவும் ஒடுக்கப்பட்டதன் வரலாறு, அனைத்துலக மனிதநேய அமைப்புகளால் செம்மையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆண்டாண்டாக அரசு திட்டமிட்டு நடத்தும் இந்த இன ஒடுக்குமுறை எனது கணிப்பில் இனப்படுகொலை முயற்சியே! ஆயினும், அனைத்துலக அரசுகள் இந்தத் தார்மீகக் குற்றச்சாட்டை மறுக்கலாம் (இனப்படுகொலை விவகாரத்தைப் பின்னர் விவாதிக்க இருக்கின்றேன்). தமிழர் தேசிய அடையாளத்தின் அடித்தளத்தையே - அதாவது அதன் மொழியை, கலாசாரத்தை, பொருளாதார வாழ்வை, இனி, பாரம்பரிய வாழ்நிலத்தை, இன ஒடுக்குமுறை தாக்குகின்றது. இதற்குமேல், இனக் கலவரங்களின் போதும், போரின் விளைவாகவும், தமிழ் மக்கள் பெருந்தொகையாகப் பூண்டோடு அழித்தொழிக்கப்படுகின்றார்கள். இனி, தொடர்ச்சியாக அடுத்தடுத்து நிகழ்ந்த கலவரங்களால் ஏற்பட்ட இன விரட்டலாலும், புலம் பெயர்வுகளாலும் தமிழ் மக்களின் இனக் கட்டமைப்பு துண்டாடப்படுவது கூட இன்னொரு வகை இனப்படுகொலைக் கூறுதானே! விடாது தொடர்ந்த கொடிய அரச ஒடுக்குறைக்கு, தொடக்கத்திலிருந்தே இயல்பான எதிர்ப்புக் கிளர்ந்தது. ஆரம்பக் கட்டங்களில், வன்செயலற்ற அரசியற் போராட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைக்குத் தங்கள் எதிர்ப்பைத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தினார்கள். அஹிம்சை என்ற அமைதித் தத்துவத்தின் அடிப்படையில் மகாத்மா காந்தி என்ற அஹிம்சா மூர்த்தியால் வகுக்கப்பட்ட வன்செயல் துறந்த போராட்ட முறை இது. அஹிம்சையின் ஆன்மீக மற்றும் ஒழுக்க சீலங்களைக் காழ்ப்புணர்வோடு சிங்கள அரசு உதாசீனப்படுத்தியது. இதனால், அஹிம்சையின் போராட்டத்தின் தார்மீகப் பலம், சிங்களத்தின் அடாவடிப் பலத்தை எதிர்கொள்ள முடியாது வலுவிழந்த சக்தியாக மாறியது. தமிழ் இனத்தின் அனைத்து அமைதிப் போராட்டங்களும் கொடூரமாக நசுக்கப்பட்டன.

நீடித்துச் செல்லும் இன நெருக்கடிக்குத் தீர்வுகாண, தமிழ் சிங்கள இனங்களின் தலைவர்கள் செய்து கொண்ட அரசியல் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் செயலிழந்து செத்துப் போயின. இதனால், இரண்டு இனங்களுக்கிடையேயும், பகைமையும், நம்பிக்கையின்மையும் ஆழமாகின. கண்மூடித்தனமான கைது, கொடுமையான சித்திரவதை, காணாமல் ஆக்குதல், சட்டம் மீறிய கொலைகள் ஆகியவை அரச படைகளின் நடவடிக்கைகளில் ஓர் அங்கமாயின.

மேலும், தமிழ்ப் பகுதிகள் மீது அரச படைகள் நிகழ்த்திய ஆக்கிரமிப்பும், அடக்குமுறைகளும், அரசால் கோலம் இடப்பட்டு, சிங்களக் காடையரால் நிறைவேற்றப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இனக்கலவரங்களும் ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்தன. தீவிரமடைந்த அரச ஒடுக்குமுறையும், சிங்கள இனவாத அரசியற் தலைமை மீது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனமும், விரக்தியும், பிரிந்து சென்று தனியான தமிழ் அரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தமிழ் அரசியல்வாதிகளைத் தள்ளியது.

தொடரும்...

# ஜேர்மன் டுஸில்டோர்வ் நகரத்திலுள்ள கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்







ஜேர்மனியின் டுஸில்டோர்வ் மாநிலத்தின் மேபுஷ் நகரத்தில் உள்ள இலங்கையர் இராஜலிங்கம் குகதாசனின் இல்லத்தை ஒட்டி புதிதாக அமைக்கப்பட்டுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளையும், நாளை மறுதினமும், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில், சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

ஏவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணி முதல் 10.40 மணி வரையுள்ள சுபநேரத்தில் விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெயர்லாண்ட் (ஹொலண்ட்), லிம்பேர்க் முருகன் கோயிலைச் சேர்ந்த சிவாகமபூஷணம், சிவாகம ஞான சூரியன் அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ உருத்திரானந்தக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக அமர்ந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

பிரான்ஸைச் சேர்ந்த சர்வ சாதகம் சிவஸ்ரீ சிவ. பாலேந்திரக்குருக்கள், முன்னேஸ்வரம் சிவஸ்ரீ தியாக மதிமன்ன சிவாச்சாரியார் ஆகியோரும் உதவிக் குரு பிரம்மஸ்ரீ ராகவசர்மாவும் இந்தக் கும்பாபிஷேகக்கிரியைப் பணியில் பங்குகொள்வர்.

இலங்கையின் அளவையூர் தவில் வித்துவான் ந.குமரகுருவின் புதல்வன் நாதஸ்வர இசை ஞான வேந்தன் குமரகுரு சசீதரன் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இந்தக் கும்பாபிஷேகத்தின் போது இசை விருந்தளிப்பர்.

இந்தக் கோயிலை ஸ்தாபித்துள்ள இ.குகதாசன் யாழ். இந்துக் கல்லூரியின் பழையமாணவர். உரும்பிராய் வடக்கு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஜேர்மன் நீதி அமைச்சுடன் இணைந்து பணியாற்றும் உரிமம் பெற்ற மொழிபெயர்ப்பு நிறுவனம் ஒன்றை நீண்டகாலம் நடத்திவருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ஜேர்மனில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண மெய்வன்மைப் போட்டிகள்

ஜேர்மனியில் அமைந்துள்ள தமிழாலயங்களை இணைத்து தமிழர் விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் மாவீரர் வெற்றிக் கிண்ண மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 17 ஆம் திகதி ஜேர்மனியின் வில்லிச் நகரத்தில் நடைபெற்றன. இந்தப்போட்டியில் ஜேர்மனியின் மத்திய மாநிலத்தில் உள்ள பல தமிழாலயங்களின் மாணவ, மாணவிகள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

இந்த நிகழ்வில் கடந்த (1982 - 1998) வரை 16 வருடங்கள் ஜேர்மனியின் வேந்தராக இருந்த ஹெல்முட் கோலின் மறைவை ஒட்டி ஜேர்மனியக் கொடியும் தமிழீழத் தேசியக் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்க விட்டு மறைந்த முன்னைநாள் ஜேர்மனியத் தலைவர் ஹெல்முட் கோலுக்கு அஞ்சலி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விளையாட்டு வீர, வீராங்கனைகளால் விளையாட்டுத் தீபம் ஏற்றப்பட்டு மிகச்சிறப்பான அணிநடை நிகழ்வும் இடம்பெற்றது. அணிநடையில் ஈடுபட்ட வீர,வீராங்கனைகள் தேசியக் கொடிகளுக்கு மரியாதை செலுத்தி அணி வகுத்துச் சென்றமை உணர்வுபூர்வமாக அமைந்தது.



பின் விளையாட்டுக்கள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றன. வெற்றியீட்டிய வீரர்களுக்குப் பதக்கங்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.

பின் முதல் மூன்று இடங்களைப் பெற்ற தமிழாலயங்களுக்கும் வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

# பிரான்ஸின் ஏவ்றி பகுதியில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டி





பிரான்ஸ் ஏவ்றி பிராங்கோ தமிழ்ச்சங்கம், ஏவ்றி தமிழ்ச்சோலை ஆகியன இணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 17 ஆம் திகதி பரிஸின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான ஏவ்றி பகுதியில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் பொதுச்சுடரை ஏவ்றி தமிழ்ச்சோலை நிர்வாகி மனோகரன் ஏற்றிவைக்க பிரான்ஸ் நாட்டுக் கொடியை பிரான்ஸ் தமிழ்சங்கங்களின் கூட்டமைப்புப் பொறுப்பாளரும் ஏவ்றி தமிழ்ச் சங்கத் தலைவருமான பாலகுமாரனும் தமிழீழத் தேசியக் கொடியை பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் கிருபாவும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஈகச்சுடரை 25.09.1992 அன்று வீரச்சாவடைந்த மாவீரர் லெப்.கேணல் சுபனின் சகோதரன் ஏற்றிவைத்து மலர் வணக்கத்தைச் செலுத்தினார். அக வணக்கத்தைத் தொடர்ந்து இல்லப் பொறுப்பாசிரியர்கள் தமது இல்லங்களின் முன்பாக மங்கல விளக்கேற்றிவைத்தனர்.

நடுவர்களின் சத்தியப் பிரமாணத்தைத் தொடர்ந்து தமிழர் விளையாட்டுத்துறையின் போட்டி முகாமையாளர் இராஜலிங்கம் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார்.

திலீபன் இல்லம், அன்னை பூபதி இல்லம் ஆகிய இல்லங்களிடையே போட்டிகள் சிறப்பாக இடம்பெற்றன.

நிறைவாக வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, பதக்கங்களும் அணிவிக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். செயற்பாட்டாளர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# உதயமானது வேலணை மேற்கு விடிவெள்ளி அமைப்பு

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் பிரிட்டனைத் தளமாகக் கொண்டு 'வேலணை மேற்கு விடிவெள்ளி அமைப்பு' என்ற பெயரில் சமூக அமைப்பு உதயமாகியுள்ளது.

பிரிட்டனில் புலம்பெயர்ந்து வாழும் வேலணை மேற்கைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு, கடந்த ஏப்ரல் மாதம் முதல் இம் மாதம் வரையான இரண்டரை மாத காலப் பகுதியில் வேலணை மேற்கு பிரதேசத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

சமூகச் சீர்கேடுகள் மற்றும் திருட்டுக்கள் நிகழ்வதை தடுக்கும் நோக்கத்துடன் வேலணை மேற்கில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டிய கற்றுதல், இரவு நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் பிரதேசவாசிகளின் நலன் கருதித் தெருக்களில் மின்விளக்குகளைப் பொருத்துதல், பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தை அபிவிருத்தி செய்தல், சிறுவர்களுக்குத் தோட்டக் கணக்குகளைத் திறந்து வைத்தல் போன்றவை உள்ளடங்கலான பல்வேறு செயற்றிட்டங்கள் கடந்த இரண்டரை மாத காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## ஆலய மகோற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். இவ்வாலயத் திருவிழா கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

***

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு மலையாளங்காடு பூரணை புட்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் கோவில் மகோற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச)

***

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் ஊலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேசுவரர் ஆலய மகோற்சவம் நேற்று முன்தினம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

10 தினங்கள் தொடர்ந்து இடம் பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச)

***

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் அருள்மிகு ஸ்ரீ அங்குசபாச பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும் உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம் பெறவுள்ளது. (ச)

# ஊற்றுப்புலம் வள்ளுவர் பண்ணை பாலத்தின் கட்டுமானம் ஸ்தம்பிதம்; மக்களுக்கு அசௌகரியம்

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி - ஊற்றுப்புலம்வள்ளுவர்பண்ணை கிராமத்துக்கான பிரதான வீதியில் காணப்படும் பாலத்தின் கட்டுமானப் பணிகள் உரிய காலத்தில் நிறைவு பெறாமையால் அதனூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்-

வள்ளுவர்பண்ணை கிராமத்துக்கான பிரதான வீதியில் காணப்படும் பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பலரும் பல் வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

வள்ளுவர்பண்ணை பிரதான வீதியைக் குறுக்கறுத்துச்செல்லும் முறிப்புக் குளம் ஆற்றுக்கான பாலம் அமைக்கப்படாமையால் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒடுங்கிய ஆபத்தான பாலம் ஊடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

அத்துடன், மழை காலங்களில் வெள்ளம் ஏற்படும் போது வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்படுகின்றன. எனவே இதற்குரிய பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு பிரதேச செயலாளர், மாவட்ட அரசஅதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதனையடுத்து ஆயிரம் பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பாலத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இந்தநிலையில் இதன் ஒப்பந்தக்காலம் கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நிறைவு பெற்ற போதும் பாலத்தின் கட்டுமானப் பணிகள் முழுமையாக முடிவடைய வில்லை.

இந்த பாலம் அமைக்கப்படாமையால் வள்ளுவர் பண்ணையில் வசித்து வரும் 85 வரையான குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் முதியவர்கள் எனப் பலரும் அன்றாடம் ஆபத்தான முறையில் பயணிக்க வேண்டியுள்ளது.

மேலும், ஒப்பந்தக் காலம் நிறைவுபெற்ற போதும் இதன் கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற்கு இயற்கை தடையாக இருந்து வருகின்றது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும் டிசெம்பர் மாதமளவிலேயே மழை பெய்தது. அதற்கு முன்னர் ஓரளவு வேலைகளை நிறைவு செய்திருப்பின் இதன் பணிகள் நிறைவு பெற்றிருக்கும்.' - என்றனர். (எ)

விசனம் தெரிவிக்கும் வள்ளுவர்பண்ணை கிராம மக்கள்



# பௌத்த தேரர்களிடம் மன்னிப்புக் கோரினார் திஸ்ஸ எம்.பி.



கொழும்பு, ஜூன் 23

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க, அஸ்கிரிய மாநாயக்க தேரர் உட்பட பௌத்த தேரர்களிடம் நேற்றுமுன்தினம் மன்னிப்புக் கோரினார்.

பௌத்த தேரர் தன் மீது அதிருப்தி கொண்டிருந்தால், அதற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோருகிறார் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு மன்னிப்புக் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அஸ்கிரிய மாநாயக்க தேரர் உட்பட சங்க சபை நேற்றுமுன்தினம் கூடிய போது வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் எனக்கு எதிராக சில விடயங்களை முன்வைத்துள்ளது. எனவே தான் அவர்களிடம் இந்த மன்னிப்பைக் கோரினேன்.

ஞானசார தேரரின் பெயரை மாத்திரம் பயன்படுத்தி, மரியாதை இன்றிப் பேசுவதாக மாநாயக்க தேரர் என் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் கடந்த காலத்தில் ஞானசாரதேரர், வெளி நாடுகளிலும் இலங்கையிலும் நடந்து கொண்ட விதத்தை எண்ணிப் பார்த்தால், அவர் மீது இருந்த மரியாதை குறைந்து போய் உள்ளது. - என்றார். (எ)

# இன ரீதியில் பொய்யான தகவல் வெளியிட்ட சட்டத்தரணி மீது நடவடிக்கை எடுக்க முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 23

கிறிஸ்தவ தேவாலயங்கள் 166 இன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொய்யான செய்தி ஒன்றைப் பரப்பிய சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நீதி மற்றும் பௌத்த விவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொய்யான கருத்தைத் தெரிவித்த சட்டத்தரணி 24 மணித்தியால காலப்பகுதிக்குள் தனது தகவல் உண்மை என்று நிரூபிக்கத் தவறின், பொது மன்னிப்புக் கோர வேண்டும்.

இல்லாத விடத்து, அவரது சட்டத்தரணிப் பதவி பறிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் பௌத்த மத விவகார அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித் திருந்த கருத்துக்கு ஏற்ப இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுவருகின்றது.

இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தும் விதத்திலான தகவலை வெளியிட்ட சட்டத்தரணிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசகர் ஆகியோரிடம் தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு தயார் செய்யப் பட்டுவருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் மெல்கம் ரஞ்சித் கர்தினல் ஆகியோருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. - என்றார். (எ)

# 'வாழ்வு தந்த வாஸ்' நாடகம் மேடையேற்றம்

புனித ஜோசப்வாஸ் ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'வாழ்வு தந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை, மறுநாள் திங்கட்கிழமை ஆகிய இருதினங்களில் மாலை 6.45 மணிக்கு, இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படும்.

திருப்பாடுகளின்நாடகத்திற்குப் பின்னராக திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மற்றுமோர் மாபெரும் தயாரிப்பாக அமைகின்ற இந்த நாடகத்தில் 60 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கின்றார்கள். கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி திருத்தந்தை வண.பிரான்சிஸ் ஸால் காலிமுகத்திடலில் ஜோசப் வாஸ் அடிகள் புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அதே ஆண்டு மே மாதத்தில் திருமறைக் கலாமன்றத்தால் இந்த நாடகம் தயாரிக்கப்பட்டு முதற்தடவையாகமேடையேற்றப்பட்டது. தற்போது இரண்டாவது தடவையாகவும் மேடையேற்றப்படுகின்றது.

புனித யோசப்வாஸ் அடிகளாரின் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வரலாற்றை எடுத்துக்காட்டும் இந்த ஆற்றுகை இரு நாள்களும் இலவசமாக காண்பிக்கப்படவுள்ளது. இந்த நாடகத்துக்கான எழுத்துரு, நெறியாள்கையை மன்றத்தின் பிரதி இயக்குநரான யோ. ஜோன்சன் ராஜ்குமார் மேற் கொண்டுள்ளார்.

ஒல்லாந்தர்காலத்தில் கத்தோலிக்க மதத்தவர்கள் துன்புறுத்தப்பட்ட போது உயிரைத்துச்சமென்று அந்தக்காலத்தில் கோவையில் இருந்து குருவாகிய புனித யோசப் வாஸ் இலங்கைக்கு வந்து, மக்களுக்காகவே பணியாற்றி கத்தோலிக்க மதத்துக்கு உயிர் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)


## தலை வீங்கிய திரிபுரா சிறுமி உயிரிழப்பு!

இயல்பு நிலையிலிருந்து 3 மடங்கு தலை வீங்கிய 5 வயது திரிபுரா சிறுமி அறுவைச் சிகிச்சைக்காக காத்திருந்த நிலையில், திடீரென உயிரிழந்தார்.

திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த 5 வயது சிறுமி ரோனா பேகம், ஹைட்ரோ செஃபாலுஸ் (Hydrocephalus) என்ற பிரச்சினையால் பாதிக்கப்பட்டார். இதனால் அந்தச் சிறுமியின் தலை 94 செ.மீ. (37 இன்ச்) வீக்கம் அடைந்தது.



இவருக்கு விரைவில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



## பா.ஜ.கவினுடைய கால்களில் விழுந்து கிடக்கிறது தமிழக அரசு!

### ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை,ஜூன் 23

பா.ஜ.க. அரசின் கால்களில் தமிழக அரசு விழுந்து கிடக்கிறது.

-இவ்வாறு தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தெரிவித்தார்.


நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி எதைக்கொண்டு வந்தாலும் தமிழக அரசு அதற்கு அப்படியே அடிபணிந்து செயற்படுகிறது. வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஆகியவற்றுக்கு எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் உள்ள இந்த ஆட்சி அஞ்சி நடுங்குகிறது. இதனாலேயே மத்திய அரசின் தயவை எதிர்பார்க்கிறது. அதனால், மாநில சுயாட்சிக்குக் குந்தகம் விளைவிக்கின்ற ஓர் அரசாக அது மாறி உள்ளது.

மத்திய அரசு மத உணர்வோடு திணிக்கும் கொள்கைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளும் கொடுமை தமிழகத்தில் நடந்து வருகிறது. மாட்டிறைச்சிக்கு பா.ஜ.க. அரசு தடை போட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் சட்டப்பேரவையில் தனித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அதை ஏற்கவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு முடிவு செய்கிறோம் என்கிறார். அ.தி.மு.கவின் இந்த ஆட்சி மக்களுக்கு எதிரானதாகும்.-என்றார். (ச)

## பி.எஸ்.எல்.வி. சி–38 ரொக்கெட்டின் நேரக்கணிப்பு நேற்று ஆரம்பம்!



பி.எஸ்.எல்.வி. சி-38 ரொக்கெட் இன்று விண்ணில் ஏவப்பட உள்ளது. இந்த நிலையில், அதற்கான நேரக்கணிப்பு நேற்று வியாழக்கிழமை காலை ஆரம்பமாகியது.


இதன்படி, ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டா ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து பி.எஸ்.எல்.வி.சி-38 ரொக்கெட், இன்று காலை 9.30 மணிக்கு 31 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான 28 மணி நேர கணிப்பு நேற்றுக் காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

பூமியை கண்காணித்தல், கடல்சார் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு மற்றும் வானிலை பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காகவே மேற்படி ரொக்கெட் விண்ணில் ஏவப்படுகிறது.

இது தொடர்பில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (இஸ்ரோ) தலைவர் கிரண்குமார் கூறுகையில்-

'இந்தச் செயற்கைக் கோள்கள் நகர்ப்புற வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு பணிக்காக விண்ணில் ஏவப்படவுள்ளன. மங்கல்யான் செயற்கைக்கோள் கடந்த 19 ஆம் திகதியோடு ஆயிரம் நாள்களைக் கடந்து வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறது.'-என்றார். (ச)

## யுவ புரஸ்கார், பால சாகித்ய விருதுகள்: மனுஷி பாரதிக்கும் வேலு சரவணனுக்கும்!



சாகித்ய அகடமி ஆண்டுதோறும் இளம் எழுத்தாளர்களுக்கான 'யுவ புரஸ்கார்' விருதையும், சிறுவர் இலக்கியத்துக்கான 'பால சாகித்ய' விருதையும் 21 இந்திய பிராந்திய மொழிப் படைப்புகளுக்கு வழங்கி வருகிறது. அதன்படி தமிழில் இந்த ஆண்டுக்கான யுவ புரஸ்கார் விருது கவிஞர் மனுஷி பாரதிக்கும் (ஜெய பாரதி), பால சாகித்ய அகடமி விருது வேலு சரவணனுக்கும் தவழங்கப்பட்டுள்ளது.

கவிஞர் மனுஷி பாரதியின் 'ஆதிக் காதலின் நினைவுக் குறிப்புகள்' கவிதைத் தொகுப்புக்கே யுவ புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலு சரவணன் குழந்தைகள் உலகில் இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் கலைஞர். புதுவைப் பல்கலைக்கழகத்தின் சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக உள்ளார். குழந்தைகள் இலக்கியத்துக்காக வேலு சரவணன் அளித்திருக்கும் ஒட்டுமொத்த பங்களிப்புக்காக பால சாகித்ய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இன்னும் 10 நாள்களுக்குள் நளினி புழல் சிறைக்கு மாற்றம்!



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி இன்னும் 10 நாள்களுக்குள் புழல் சிறைக்கு மாற்றப்பட உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி, தன்னைப் புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று சிறைத்துறை தலைவருக்கு நளினி மனு அளித்தார். மனு விசாரிக்கப்படாததை அடுத்து, உடனடியாக புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியும் கடந்த 13 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை 5 நாள்கள் சிறையில் நளினி உண்ணாவிரதம் இருந்தார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி, பெண்கள் சிறையில் உள்ள நளினியை சந்தித்தார். இதனை அடுத்து, சிறையில் இருந்து வெளியே வந்த அவர் ஊடகவியலாளர்களிடம் கூறுகையில்-

'நளினியின் கோரிக்கை மனு தொடர்பில் சிறைத்துறைக் கூடுதல் டி.ஜி.பி. அலுவலகத்தில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இன்னும் 10 நாள்களுக்குள் அவா புழல் சிறைக்கு மாற்றப்பட உள்ளார்-என்றார்.(ச)

## 'என்னைக் கருணைக் கொலை செய்து விடுங்கள்



## ராஜீவ் கொலை வழக்கு ஆயுள் கைதி

# தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை!

'என்னைக் கருணைக் கொலை செய்து உடலைக் குடும்பத்தினரிடம் ஒப்படைத்து விடுங்கள்' என ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வரும் ரொபேர்ட் பயஸ், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சிறைக் கண்காணிப்பாளர் மூலமாகத் தமிழக முதலமைச்சருக்கு மூன்று பக்க கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2014 ஆம் ஆண்டில் எமது விடுதலை தொடர்பில் தமிழக முதலமைச்சர் எடுத்த முடிவை அனைத்து அரசியல் தலைவர்களும் ஆதரித்தனர். நீதிமன்றங்களும் அதனைப் பரிந்துரைத்தன. ஆனாலும் அந்த முடிவு நிறுத்தி வைக்கப்பட்டது.

எங்களை விடுதலை செய்யும் மாநில அரசின் முடிவை, முன்பிருந்த மத்திய அரசும், தற்போதைய மத்திய அரசும் கடுமையாக எதிர்த்து வருகின்றன. எமது வாழ்வைச் சிறைக்குள்ளேயே முடித்து விட வேண்டுமென்றே விரும்புகின்றன.

இந்த மாதம் 11 ஆம் திகதியுடன் நான் சிறைக்குள் வந்து 26 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. நீண்ட சிறை வாசம் என்னை மட்டுமன்றி, ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் தண்டனைக்குள்ளாக்கி இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக என்னை எனது குடும்பத்தினர் வந்து சந்திக்கவில்லை. இந்த நிலையில், எனது வாழ்வில் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இனி விடுதலை இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், உயிர்வாழ்வதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

-என்று ரொபேர்ட் பயஸ் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

இதேவேளை, ரொபேர்ட் பயசின் வழக்கறிஞர் தடா சந்திரசேகர், இது தொடர்பில் பி.பி.ஸிக்குத் தெரிவிக்கையில்-

நான் அவரிடம் பேசினேன். அவருக்கு மனைவியும் குழந்தையும் இருக்கிறார்கள். இருந்தும் வாழ முடியவில்லை. அதனால்தான் இந்த முடிவுக்கு வந்துவிட்டார். இந்தக் கடிதம் சிறைத்துறைக் கண்காணிப்பாளர் மூலம் முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.-என்றார்.

1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற ராஜீவ் கொலையை அடுத்து சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகியோரோடு ரொபர்ட் பயஸும் கைது செய்யப்பட்டார். இவர்களுக்கு முதலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

வேலூர் மற்றும் புழல் சிறையில் தொடர்ந்தும் வாடும் ரொபர்ட் பயஸ் இதே கருணைக் கொலைக்கான மனுவை முன்னாள் தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கும் அனுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# காபுலில் கார் வெடிகுண்டுத் தாக்குதல்: 29 பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்!





காபுல்,ஜூன் 23

ஆப்கானிஸ்தான் நாட்டுத் தலைநகரான காபுலில் அமைந்துள்ள 'நியூ காபூல் வங்கி' முன் நேற்று வியாழக் கிழமை தீவிரவாதிகள் நடத்திய கார் வெடி குண்டுத் தாக்குதலில், 29பேர் உயிரிழந்தனர்; 50 பேர் படுகாயம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் வங்கியில் சம்பளம் எடுக்க வரிசையில் நின்றவர்களே அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

நியூ காபூல் வங்கியில் பொதுமக்கள் பலர் தங்களது சம்பளத்தை எடுக்க வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அப்போது வங்கி முன் நிறுத்தப்பட்டிருந்த வெடிகுண்டுகள் நிரப்பிய கார் திடீரென வெடித்துச் சிதறியது.

இந்தத் திடீர்த் தாக்குதலில், வங்கியில் கூடியிருந்தவர்கள் உடல் சிதறிப் பலியாகினர்.

இது தொடர்பில், ஆப்கானிஸ்தான் ஹெல்மாண்ட் மாகாண ஆளுநர் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்- ''இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சமீப காலமாக ஆப்கானிஸ்தானில் பொதுமக்கள் கூடும் இடங்களில் தலிபான் மற்றும் ஐ.எஸ். அமைப்பினர் திடீர் தாக்குதலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை அரசைக் கவலையடையச் செய்துள்ளது'' -என்றார்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு பயங்கரவாத இயக்கமும் பொறுப்புக் ஏற்கவில்லை. எனினும், இதே வங்கியை தலிபான், ஐ.எஸ். போன்ற பயங்கரவாத இயக்கங்கள் பல தடவை தாக்கத் திட்டமிட்டிருந்தன என்றும் அந்த நாட்டு உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வேற்றுக் கிரகவாசிகளுக்குப் பயந்து 40 ஆயிரம் அமெரிக்கர்கள் காப்புறுதி!

வேற்று கிரகவாசிகளால் தாங்கள் கடத்தப்படலாம் என்ற அச்சம் அமெரிக்கர்களில் பலருக்கு வந்துள்ளது. இதனால், சுமார் 40 ஆயிரம் அமெரிக்கர்கள் தங்களைக் காப்புறுதி செய்துள்ளனர்.

அமெரிக்க மக்களிடம் எதற்கெடுத்தாலும் காப்புறுதி செய்து கொள்ளும் பழக்கம் வழக்கமாக உள்ளது. இந்த நிலையில், வேற்று கிரகவாசிகளுக்கு பயந்து 40 ஆயிரம் பேர் காப்புறுதி செய்த சம்பவம் அங்கு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாசா' வேற்றுக்கிரகவாசிகள் பற்றி ஆராய்வதற்காக 'கெப்ளர்' என்ற விண்கலத்தை அனுப்பி ஆய்வு செய்தது. இதன் முடிவுகளை வெளியிடப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தது. எனவே, வேற்று கிரகவாசிகள் இருக்கிறார்களா? இல்லையா? என்ற தகவல் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், நாசா இது சம்பந்தமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதில், சூரிய மண்டல பிரபஞ்சத்துக்கு வெளியே 4 ஆயிரத்து 34 கிரகங்கள் இருக்கின்றன. கெப்ளர் விண்கலம் மூலம் 219 கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 10 கிரகங்கள் பூமியை போன்று சீதோஷ்ண நிலையுடன் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வேற்று கிரகவாசிகள் இருக்கிறார்களா என்பது பற்றி உறுதியாக எதுவும் கூறப்படவில்லை.

இந்த நிலையில், வேற்று கிரகவாசிகளால் தாங்கள் கடத்தப்படலாம் என்ற அச்சம் அமெரிக்கர்கள் பலருக்கு ஏற்பட்டுள்ளதாம். (ச)

# பிரெக்சிற் உடன்படிக்கைக்கே தெரேசா அரசு முன்னுரிமை!

லண்டன், ஜூன் 23

பிரித்தானியாவுக்குச் சிறந்த பிரெக்சிற் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கான விதிகளில் பரந்த-ஒருமித்த-கருத்தை வென்றெடுப்பதுமே தெரேசா மே அரசின் முதல் நோக்கம்.

-இவ்வாறு மகாராணி எலிசபெத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரித்தானிய நாடாளுமன்ற ஆரம்ப அமர்வின்போது அரசகொள்கைப்பிரகடனத்தை விடுக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தைப் பிரித்தானிய சட்டத்துக்கு மாற்றுவதற்கான 'Great Repeal' சட்டமூலத்தை அரசு அறிமுகப்படுத்துகிறது. அத்துடன், குடியேற்றம், சர்வதேச தடைகள் மற்றும் அணுசக்தி பாதுகாப்பு, விவசாயம், மீன்வளர்ப்பு உள்ளிட்ட விவகாரங்களில் புதிய கொள்கைகளையும் அரசு வழங்குகிறது. மேலும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியில் பிரித்தானியாவின் ஒருமித்த கருத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமைச்சர்கள் உறுதியளித்துள்ளனர். -என்றார். (ச)



நாடாளுமன்றில் மகாராணி எலிசபெத் உரை

## மகாராணி எலிசபெத்தின் கணவர் ஆஸ்பத்திரியில்!



பிரித்தானிய அரசி எலிசபெத்தின் கணவரும் எடின்பேர்க் கோமகன் என்றழைக்கப்படும் அந்த நாட்டின் இளவரசருமான பிலிப் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பிலிப் இந்த ஆண்டு கோடை காலத்துக்குப் பிறகு அரச பணிகளில் இருந்து ஓய்வு பெறுவார் என பக்கிங்ஹாம் அரண்மனை கடந்த மே மாதம் அறிவித்தது.

எத்தகைய உடல் உபாதைகளால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்பது தொடர்பான விரிவான தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தற்போது 96 வயதாகும் இளவரசர் பிலிப்புக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வயிற்றில் ஓர் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர், பெரிய அளவிலான உடல்நலக்குறைவு எதுவும் அவருக்கு ஏற்படவில்லை. எனினும், சிறிய உடல் உபாதைகளால் அவர் அவ்வப்போது பாதிக்கப்பட்டு, அதற்கான தொடர் சிகிச்சைகள் பெற்று வந்தார். இந்த நிலையில், அவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வரலாற்றுச் சிறப்புமிக்க மொசூல் மசூதி சேதம்! ஐ.எஸ்.மீது குற்றச்சாட்டு!!

மொசூல், ஜூன் 23

ஈராக் மொசூலில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அல்-நூரி மசூதியை, ஐ.எஸ். பயங்கரவாதிகள் சேதமாக்கியுள்ளனர் என ஈராக்கிய படையினர் தெரிவித்துள்ளனர். எனினும் அமெரிக்க படையினரின் விமானத் தாக்குதலிலேயே மசூதி சேதமடைந்தது என ஐ.எஸ். தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசூதி பெருமளவில் அழிவடைந்துள்ளமை வான்வழி ஒளிப்படங்களில் இருந்து புலனாகின்றது.

இது தொடர்பில் ஈராக்கிய அரச படையின் தளபதி தெரிவிக்கையில்-


''மற்றுமொரு வரலாற்று ரீதியிலான குற்றத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் செய்துள்ளனர். இந்த சம்பவத்தின் போது ஈராக்கிய படையினர், இந்தப் பகுதியிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இருந்தனர்''-என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் பெரும் பொக்கிஷங்களில் ஒன்றை ஐ.எஸ். அமைப்பு சேதப்படுத்திவிட்டது என ஈராக்கில் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க மூத்த தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க மசூதி அழிக்கப்பட்டமை மொசூல் மற்றும் அனைத்து ஈராக்கிய மக்களுக்கும் எதிரான குற்றம். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று மேஜர் ஜெனரல் ஜோசப் மாட்டின் தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசலை வெடிவைத்து தகர்த்த ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நடவடிக்கை அவர்களது தோல்வியை அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்ட அறிவிப்பு என ஈராக்கிய பிரதமர் ஹைதர் அல் அபாடி தெரிவித்தார்.





# கிரிக்கெட் மூலம் ஒன்றுபடும் இலங்கை – பாகிஸ்தான்!

இலங்கை அணியின் ரசிகர்கள் மற்றும் இந்திய அணியின் ரசிகர் அல்லாதவர்கள் அனைவரும், பாகிஸ்தான் அணி சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தியிருந்ததன் மூலம் கிடைத்த மகிழ்ச்சியைக் கொண்டாட ஒன்று கூடியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி ஐ.சி.சி இன் மூன்று வகையான கிண்ணங்களையும் வென்ற (உலகக் கிண்ணம், இருபதுக்கு 20 உலகக் கிண்ணம், சம்பியன்ஸ் கிண்ணம்) உலகின் நான்காவது நாடாக மாறியிருந்தது.

இலங்கை அணியின் அனைத்து ரசிகர்களும் பாகிஸ்தான் அணியின் வெற்றியை, சமூக வலைத்தளங்களில் கொண்டாடியிருந்தனர்.

இது பாகிஸ்தானுக்கு அடுத்ததாக, அந்த வெற்றியின் மூலம் 20 மில்லியனிற்கு மேலான மக்கள் தொகையைக் கொண்ட இலங்கை மகிழ்வுற்றதை வெளிப்படுத்துகின்றது.

சம்பியன்ஸ் கிண்ண அரை இறுதிப் போட்டிகளிற்கு, இம்முறை ஒரே யோர் ஆசிய அணியாக இலங்கை அணி தெரிவாகாது இருந்தமை சில இலங்கை ரசிகர்களிற்கு கவலையை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், அவர்கள் அனைவரும் தங்கள் உள்ளங்களில் ஒரு மூலையில் பாகிஸ்தான் அணி, இங்கிலாந்து அணியையும், இந்திய அணியையும் வீழ்த்த வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தனர்.

இதனால், கடந்த ஓரிரு நாள்களில் இலங்கை ரசிகர்கள் பாகிஸ்தானியர்களாக மாறியிருந்ததை யாராலும் மறுக்க முடியாது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை அணி வீரர்கள் சென்றிருந்த பஸ்ஸின் மீது பாகிஸ்தானில் வைத்து கொடூரமான தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தை அடுத்து அந்த நாட்டிற்கு கிரிக்கெட் விளையாடும் பிரதான அணிகள் எவையும் இதுவரை சுற்றுப் பயணங்கள் எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை.

இது இவ்வாறிருக்க இந்த சம்பவத்தை காரணம் காட்டி பாகிஸ்தானை இலங்கையர்கள் எவரும் வெறுக்கவில்லை. பாகிஸ்தானுடன் இலங்கையின் நேசத்தை முக்கியமாக இந்திய அணியுடன் பாகிஸ்தான் விளையாடிய போட்டிகளின் போது எம்மால் அவதானிக்க முடியும்.

அதேபோன்று, இந்த நட்புறவை நீடிக்க இரண்டு அணிகளும் கிரிக்கெட் தொடர்களில் விளையாட ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பயணிக்காமல் பாகிஸ்தான் செல்லலாம் அல்லவா? பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலப்படுத்தப்படும் பட்சத்தில், நிச்சயமாக பாகிஸ்தானின் லாஹூர் மற்றும் கராச்சி ஆகிய நகரங்களில் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் இடம் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இதே போன்றதொரு கருத்தை பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அஹ்மட், தமது வெற்றியின் பின்னர் தெரிவித்திருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபையும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் ஒன்றாக இணைந்து இவ்வருட செப்ரெம்பர் மாதத்தில, சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் பாகிஸ்தானில் கொண்டு வர உலக பதினொருவர் அணி மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரினை லாஹூரில் நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்தத் தொடர் வெற்றியாகும் பட்சத்தில், இந்த வருட இறுதிப்பகுதியில் இலங்கை அணி தனது நண்பனிற்கு உதவும் விதமாக, தமது முழுத் தொடரையும் விளையாட ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லாமல் பாகிஸ்தானிற்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டு அமைச்சரின் கருத்துக்கு பதிலடி கொடுத்தார் லசித் மலிங்க!

கொழும்பு, ஜூன் 23

கடந்த ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண குழு மட்ட போட்டிகளில் அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் தீர்மானமிக்க போட்டியில் இலங்கை அணி மிகவும் மோசமான முறையில் தோல்வியடைந்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது.

இது குறித்து, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் அணி பலவீனமான அணி என்றும், அணியின் வீரர்களை வலுவான வீரர்களாக உருவாக்குவதற்கு இராணுவ முகாமொன்றுக்கு பயிற்சிகளுக்காக அனுப்ப வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதற்கு வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவிக்கையில்-

இப்பொழுது யுத்தம் நிறைவுற்றுள்ளது. இனி மேலும் எவரும் இராணுவ பயிற்சிகளில் ஈடுபட வேண்டிய தேவையுள்ளது என்று நான் நினைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவ மேலும், தெரிவிக்கையில் - இந்திய அணியுடனான போட்டியில் வெற்றி பெற்ற போது எம்மை எல்லோரும் புகழ்ந்தார்கள். எனினும், அடுத்த போட்டியில் தோல்வியுற்ற போது நாம் பலவீனமான அணி என்று குறை கூறுகின்றார்கள் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

18 மாதங்களுக்குப் பின்னர், ஒரு நாள் சர்வதேசப் கிரிக்கெட் போட்டிகளுக்காக சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மீண்டும் இலங்கை அணியுடன் இணைந்து கொண்ட லசித் மாலிங்க எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள சிம்பாப்வே அணியுடனான போட்டிகளுக்காக பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே



அமைச்சருக்கு பதிலடி வழங்கும் வகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இப்போதுள்ள இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் தற்போதுள்ள நிலையுடன் ஒப்பிடும் பொழுது, உரிய உடல் தகுதியுடன் இல்லை எனவும், 2016 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்ததாலே போட்டிகளில் வெற்றியீட்டியது அத்துடன், இலங்கை கிரிக்கெட் வீரர்களும் அது போலவே, இராணுவப் பயிற்சிகளை பெற்றுத் தம்மை பலப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் யோசனை தெரிவித்திருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மாத்திரமே பெருத்த வயிறுகளுடன் காணப்படுகின்றனர் என்றும், அந்த வகையில், பிடியெடுப்புகளை தவறவிட்டதில், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பிடியெடுப்புகளை விடுங்கள், எவ்வளவு உதிரி ஓட்டங்களை களத்தில் பெற்றுக் கொடுத்தார்கள். பங்களாதேஷ் அணியைப் பாருங்கள். கடுமையான பயிற்சிகளின் மூலம் எவ்வாறு உடலமைப்பை பேணி வருகின்றார்கள்.

அதனால், இலங்கை வீரர்களை 6 மாதங்களுக்கு இராணுவப் பயிற்சிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் முகமாகவே லசித் மலிங்க மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

# மலிங்க பணத்துக்காகவே அதிகமாக விளையாடுகின்றார்!

## அமைச்சர் தயாசிறி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 23

இலங்கை வீரர்களின் உடல் தகுதி மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் குறித்து தற்பொழுது பல தரப்பினராலும் அதிகமாகக் பேசப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், லசித் மலிங்க விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கு கொடுத்த பதிலுக்கு மீண்டும் அமைச்சர் கடுமையான விதத்தில் பதில் கொடுத்துள்ளார்.



இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின் உடல் தகுதி மோசமாக உள்ளது, வீரர்கள் உடல் பருமனைக் கொண்டுள்ளனர். எனவே, அவர்களை சரி செய்ய இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று அண்மையில் அமைச்சர் தயாசிறி குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இதற்குப் பதில் கொடுக்கும் வகையில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க கருத்துத் தெரிவித்திருந்தார். அதில், இப்பொழுது யுத்தம் நிறைவுற்றுள்ளது. இனிமேலும் எவரும் இராணுவ பயிற்சிகளில் ஈடுபட வேண்டிய தேவையுள்ளது என நான் நினைக்கவில்லை. இந்திய அணியுடனான போட்டியில் வெற்றி பெற்ற போது எம்மை எல்லோரும் புகழ்ந்தார்கள். எனினும், அடுத்த போட்டியில் தோல்வியுற்ற போது நாம் பலவீனமான அணி என்று குறை கூறுகின்றார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது லசித் மலிங்க தெரிவித்த விடயம் குறித்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதற்குப் பதில் கூறும் போதே, அமைச்சர் கடுமையான முறையில் லசித் மலிங்கவை விமர்சித்துள்ளார்.

உடல் தகுதியை பரிசோதிப்பது குறித்து நான் இறுதித் தீர்மானம் எடுத்துள்ளேன். அதற்கு அமைவாக அனைவரும் உடல் தகுதியை உறுதிப்படுத்த வேண்டும். எவ்வளவு திறமையுள்ள வீரராக இருந்தாலும் பரவாயில்லை, உடல் தகுதியை உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில் அவர் அணியில் இருந்து வெளியேற வேண்டி ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், மலிங்க ஐ.பி.எல் இல் விளையாடுகின்றமை குறித்தும் அமைச்சர் விமர்சனம் தெரிவித்துள்ளார்.

அவர் உடல் தகுதி குறித்து கதைக்கும் அந்த வீரர்கள் இலங்கையில் உடல் தகுதியை சீர்செய்து கொண்டு இந்தியாவில் போய் விளையாடுகின்றனர். அவர்கள் தாய் நாட்டிற்காக அன்றி பணத்திற்காகவே அதிகம் விளையாடுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லசித் மலிங்க இலங்கை அணிக்காக விளையாடுவதை விட இந்தியன் பிரீமியர் லீக்கில் விளையாடுவதையே அதிகம் விரும்புகிறார் என கடந்த காலங்களிலும் பல குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இது குறித்து கடந்த வருடம் ஊடகம் ஒன்றுக்கு மலிங்க கருத்துத் தெரிவிக்கையில்-

நான் அணியின் வெற்றிக்குப் பல வகைகளிலும் பங்காற்றியுள்ளேன். நான் பெற்ற ஹட்ரிக் விக்கெட்டுகள் அனைத்தும் தாய் நாட்டுக்காகவே அன்றி, பணத்திற்காகவோ, ஐ.பி.எல். போட்டியிலோ இல்லை.

உலகக் கிண்ணத்திலும் நான் அதிக ஹட்ரிக்களை பெற்றுள்ளமை தாய் நாட்டிற்காகவே ஆகும் எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டோவுக்கு நீதிமன்ற உத்தரவு!

மாட்ரிட், ஜூன் 23

வரி ஏய்ப்பு தொடர்பாக விளக்கமளிப்பதற்காக போர்த்துக்கல் உதைபந்து அணியின் தலைவரும் ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.




ரொனால்டோவைத் தொடர்ந்து வரி ஏய்ப்புப் புகாரில் ரியல் மாட்ரிட் அணியின் முன்னாள் பயிற்சியாளரும் சிக்கியுள்ளார்.

ரியல் மாட்ரிட் அணியின் முன்னாள் பயிற்சியாளர்மீது சுமார் 5 மில்லியன் டொலர் வரை வரி ஏய்ப்புச் செய்துள்ளார் எனப் புகார் எழுந்துள்ளது.

ஸ்பெயின் நாட்டின் முக்கிய உதைபந்து அணியான ரியல் மாட்ரிட் அணியில், 2013 ஆம் ஆண்டு வரை பயிற்சியாளராக இருந்தவர் ஜோஸ் மௌரின்ஹோ.

அந்தக் காலகட்டத்தில், இவர் சுமார் 5 மில்லியன் டொலர் வரை வரி ஏய்ப்பு செய்துள்ளார் என ஸ்பெய்ன் வழக்கறிஞர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

எனினும், இந்தப் புகாரை, ஜோஸ் மௌரின்ஹோ முழுமையாக மறுத்துள்ளார்.

இவர், தற்போது இங்கிலாந்தின் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் பயிற்சியாளராக உள்ளார்.

உதைபந்து வீரர்கள் அடுத்தடுத்து வரி ஏய்ப்பு புகாரில் சிக்குகின்றமை உதைபந்து ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மாதம் பார்சிலோனா அணியின் முன்னணி வீரரான மெஸ்ஸியும் வரி ஏய்ப்பு புகாரில் சிக்கி, அவருக்கு 21 மாதம் சிறைத் தண்டனை விதித்து ஸ்பெய்ன் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா–மேற்கிந்தியத் தீவுகள் இன்று ஒருநாள் பலப்பரீட்சை!



டிரினிடாட், ஜூன் 23

இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையே 5 ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் டிரினிடாட்டில் உள்ள போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று இடம்பெறவுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரே ஒரு இருபதுக்கு 20 ஆட்டத்தில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் விளையாடிய இந்திய அணி லண்டனில் இருந்து அப்படியே மேற்கிந்தியத் தீவுகளுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

சாம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணி இறுதிப் போட்டியில் பாகிஸ்தானிடம் மிகவும் மோசமாகத் தோற்றது. இதனால், இந்திய வீரர்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இதனால், மேற்கிந்தியத் தீவுகள் தொடரை முழுமையாக வெல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் ரோகித் சர்மாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக அதிரடி துடுப்பாட்ட வீரரும், விக்கெட் காப்பாளருமான ரிஷப் பந்த் இடம் பெற்றுள்ளார். இதனால், தவானுடன் தொடக்க வீரராக யார் விளையாடுவார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ரகானே அல்லது ரிஷப் பந்த் தொடக்க வீரராக களம் இறங்கலாம்.

மேலும், வேகப்பந்து வீரர் பும்ராவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு குல்திப் யாதவ் சேர்க்கப்பட்டுள்ளார். பும்ரா இடத்தில் வேகப்பந்து வீரரான முகமது ஷமி அல்லது உமேஷ் யாதவ் இடம் பெறலாம்.

இந்திய அணி கடைசியாக கடந்த 2013 ஆம் ஆண்டு மே மாதம் விளையாடிய 3 நாடுகள் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றது.

இதனால், இந்தத் தொடரில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளது. பயிற்சியாளர் பதவியில் இருந்து கும்ளே விலகியமையால் இந்திய அணி இந்தத் தொடரில் நெருக்கடியுடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சமீபத்தில் சொந்த மண்ணில் ஆப்கானிஸ்தானுடன் ஒரு நாள் தொடரில் விளையாடியது. 3 போட்டிகள் கொண்ட இந்த தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. இந்தத் தொடரில் விளையாடிய வீரர்களே முதல் 2 போட்டிக்கான அணியில் இடம் பெற்றுள்ளனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மாற்றம் எதுவும் இல்லை.

இரு அணிகளும் கடைசியாக கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி பேர்த்தில் நடந்த உலக கோப்பையில் மோதின. இதில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் பங்குகொள்ளும் வீரர்களின் விவரம் வருமாறு:-

**இந்தியா**

விராட் கோஹ்லி (தலைவர்), தவான், ரகானே, யுவராஜ் சிங், டோனி, ஹார்த்திக் பாண்டியா, கேதர் ஜாதவ், ஜடேஜா, அஸ்வின், புவனேஷ்வர் குமார், தினேஷ் கார்த்திக், ரிஷப் பந்த், உமேஷ் யாதவ், முகமது ஷமி, குல்தீப் யாதவ்.

**மேற்கிந்தியத் தீவுகள்**

ஜேசன் ஹோல்டர் (தலைவர்), இவான் லீவாஸ், ரோஸ்டன் சேஸ், ஹோப், ஜேசன் முகமது, கீரன் போவெல், ஜோனதன் கார்ட்டர், ரோவ்மேன் போவெல், கெஸ்ரிக் வில்லியம்ஸ், ஆஸ்லே நர்ஸ், அல்ஜாரி ஜோசப்ஸ், தேவேந்திர பிஷு, கும்மின்ஸ்.

## அயர்லாந்துக்கும் ஆப்கானுக்கும் டெஸ்ட் அந்தஸ்து

அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் முழு மையான அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. அத்துடன் இரு அணிகளும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் தகுதியையும் பெற்றுள்ளன என சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவித்துள்ளது. (உ)

### பதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான விசாரணைகள் பூர்த்தியடையாமையால் அவர்கள் தொடர்பில் புதிய தொரு விசாரணைக் குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்வது குறித்துத் தாம் ஆராய்ந்து வருகின்றார் என நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்.

புதிய விசாரணைக்குழு விரைவில் அமைக்கப்படும் என்றும் முதல்வர் கூறினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் பின்னர் ஊடகவியலாளருடன் பேசிய போதே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார். (உ)

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு உறுப் பினர்களின் சுயவிவரப் படிவங்களைத் தாம் திரட்டி வருகின்றார் என்றும் சொன்னார்.

"புதிய அமைச்சர்களை நியமிக்கின்றமை தொடர்பில் நான் இன்னும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை. தற்போது சபை உறுப்பினர்களிடம் சுயவிவரப் படிவங்களைக் கோரியுள்ளேன். சில உறுப்பினர்களின் சுயவிவரப் படிவங்கள் கிடைத்துள்ளன.

"உறுப்பினர்களின் கட்சி, அவர்களின் தகுதி, அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மாவட்டம் ஆகியவற்றைக் கருத்தில் எடுத்துத்தான் அமைச்சர்களைத் தெரிவு செய்ய முடியும்."

- இவ்வாறு நேற்றைய சபை அமர்வின் பின்னர் ஊடகவியலாளர்களோடு பேசிய சமயம் முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவித்தார். (உ)

### தெமட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெனத் தீப்பற்றி எரிந்துள் ளன.

முதலில் ஒரு காரில் பற்றிய தீ மளமளவென்று அருகில் தரித்திருந்த இரு கார்களிலும் பற்றிக் கொண்டது எனக் கூறப்பட்டது.

### அவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் என்ற ஒழுங்கு இருந்தது.

நேற்றைய அமர்வின்போது இது, முதல்வர், சுகாதார அமைச்சர், மீன்பிடி அமைச்சர், பிரதி அவைத் தலைவர், முன்னாள் கல்வி அமைச்சர், முன்னாள் விவசாய அமைச்சர் என ஒழுங்கு படுத்தப்பட்டது.

வெற்றிடமாகியுள்ள இரு அமைச்சுப் பதவிகளை முதல்வர் விக்னேஸ்வரன் தம்வசம் வைத்துள்ளார். புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படும் வரை தற்போதைய ஒழுங்கு தொடரும் என அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா ஆகியோரும் நேற்றைய அமர்வில் பிரசன்னமாயிருந்தனர். (உ)

### விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் இருக்கும் பிரபல ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் தமது தளம் மூலம், இது தொடர்பாக வெளியிட்ட செய்தியையே 'காலைக்கதிர்' நாளிதழ் அவரை மேற்கோள்காட்டி அப்படியே பிரசுரித்திருந்தது.

'காலைக்கதிர்' பிரசுரித்த செய்தி "ஆதாரமற்றது; உண்மைக்குப் புறம்பானது. இது தொடர்பாக மிக விரைவில் சட்டரீதியாக, உண்மையான விவரங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்படும்." - என முதல்வரின் ஊடகச்செயலாளர் சிறு மறுப்பு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அது அடுத்த நாள் காலைக்கதிரில் அப்படியே பிரசுரமானது.

இப்போது 'கனேடிய தமிழர் சமூக அமையம்' இது தொடர்பான நிலைமையைத் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை நேற்று அனுப்பி வைத்திருக்கின்றது. அதன் விவரம் வருமாறு:-

கடந்த சில நாள்களாக ஊடகங்கள், இணையத்தளங்களில் வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் அவர்களது கனடா வருகையின்போது முதல்வர் நிதியத்திற்காகத் திரட்டப்பட்ட நிதி தொடர்பாக உண்மைக்குப் புறம்பான செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரது கனடா வருகையை பல அமைப்புகளுடனும் சேர்ந்து முன்னெடுத்தவர்கள் என்கின்ற வகையிலும், பிரசுரிக்கப்பட்ட செய்திக் கட்டுரையில் கனேடியத் தமிழர் சமூக அமையத்தினுடைய பெயர் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையிலும் இச்செய்தி தொடர்பான உண்மை நிலையை மக்கள் முன் வைக்க வேண்டியது எமது கடமையாகும்.

கனடாவுக்கான முதலமைச்சர் வருகையின்போது நடத்தப்பட்ட முதல்வர் உதவித் திட்டத்திற்கான நிதி சேர் நிகழ்வின் கணக்கறிக்கையையும் அதனுடன் எமது ஊடக அறிக்கையையும் மே மாதம் 16 ஆம் திகதி 2017 இல் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்தோம். இக் கணக்கறிக்கையில் கையிருப்பிலுள்ள பணம் மற்றும் வரவேண்டிய தொகை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பணம் இது வரையிலும் யாரிடமும் கையளிக்கப்படவில்லை. ஏற்கனவே பேசப்பட்டதன்படி முதல்வரது உதவித்திட்ட அமைப்பில் கனடிய சட்டதிட்டங்களுக்கமையவும் மற்றும் நல்லாட்சிக்கான சில நிர்வாக நடைமுறைகளும் சீரமைக்கவேண்டியமையால் இப் பணத்தை நாம் இன்னமும் அனுப்பிவைக்கவில்லை.

அவ்விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக இப்பணம் முதல்வரது உதவித் திட்ட அமைப்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

நாம் முன்னர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த கணக்கறிக்கையையும், எமது ஊடக அறிக்கையையும் மீளவும் இத்துடன் இணைத்துள்ளோம்.

இச்செய்திகள் தொடர்பாக முதலமைச்சர் அலுவலகமும் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அனைத்து ஊடகங்கள், இணையத்தளங்களிடம் இவ் உண்மையான விவரங்களை மக்களுக்குத் தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.-என்றுள்ளது.

இந்த நிகழ்வின் நிகர லாபமாக 50 ஆயிரம் கனேடிய டொலர் திரட்டியமை பற்றி கணக்கு அறிக்கையும் இந்தச் செய்தி அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்தது. (உ)

### பொருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவித்தலை அவர் ஏற்கனவே சபாநாயகரிடம் வழங்கியுள்ளார்.

அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னான வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 65 ஆயிரம் வீடுகளைக் கட்டும் வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்த மீள்குடியேற்ற அமைச்சு, உலோகப் பொருத்து வீடுகளைக் கட்டும் யோசனை ஒன்றை முன்வைத்தது. இதற்கு உதவியாக இரண்டு மாதிரி வீடுகளை யாழ்ப்பாணத்தில் அமைத்து மக்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இப்படியான வீடுகள் எமது காலநிலைக்கும், வாழ்க்கை முறைக்கும் ஒவ்வாதவை என்றும், இரட்டிப்பான செலவுடையவை என்றும் நாம் சுட்டிக்காட்டி, கல் வீடுகள் கட்டிக் கொடுக்குமாறு கேட்டிருந்தோம்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு இந்தப் பொருத்துவீட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தோம். அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி மாவட்டங்களில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இப்பொருத்து வீட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு, அந்த வீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கல் வீடுகளை அரைவாசிச் செலவில் கட்டும் முறையொன்றையும் நாமே முற்படுத்தியிருந்தோம்.

ஆனாலும், 65 ஆயிரம் பொருத்து வீடுகளைக் கட்டாமல் 6 ஆயிரம் பொருத்து வீடுகளைக் கட்டுவதற்கு சில முன்னெடுப்புக்கள் நடைபெறுகின்றன.

இந்த நடவடிக்கையை அரசாங்கம் கைவிடுவதோடு, கல் வீடுகள் கட்டும் திட்டத்தையும் கால தாமதம் இல்லாமல் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கோருகிறேன். - என்று உள்ளது.

### இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கூடல்' போல ஒன்றிணைந்து - முழு ஐக்கியத்துடன் - நடத்திக் காட்டினர்.

செய்தி சேகரிக்க வருகை தந்திருந்த செய்தியாளர்களே நேற்றைய சபை அமர்வைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, புயலின் பின்னரான மயான அமைதி என விவரித்தனர்.

வழக்கமாக எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று முட்டிமோதுகின்றமையுடன், ஆளும் கட்சிக்குள்ளேயே முரண்பட்டு நிற்கின்ற செயற்பாடு நேற்று நடைபெறவில்லை.

கடந்த திங்கள் வரை இரு அணிகளாய்ப் பிரிந்துநின்ற ஆளும் தரப்பினர் சபையில் ஒன்றாக அமர்ந்து, அருகருகே நின்று கைலாகு கொடுத்து, சகஜமாக - சிரித்து - பேசிக் கொண்டனர்.

கடந்த வாரம் பிரச்சினைக்குக் காரணமான விடயங்களை யாருமே இந்த அமர்வில் நினைவூட்டவேயில்லை.

அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் குழப்பம் ஏதுமின்றி அவையை நடத்தினார். அவர் குறித்தும் சர்ச்சை ஏதும் நேற்றுக் கிளப்பப்படவில்லை.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான நேற்றைய அமர்வு பிற்பகல் 1 மணிக்கு முடிவுக்கு வந்தது. (உ)

# மாணவர்களின் குழப்பத்தால் மில்லியன் கணக்கில் சேதம்

## இப்பழிச் சொல்கிறார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜூன் 23

சைட்டத்திற்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சுக்குள் நுழைந்து ஏற்படுத்திய குழப்ப நிலையால் அமைச்சின் சொத்துக்கள் மற்றும் வாகனங்களுக்கு மில்லியன் கணக்கான சேதம் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் 4 ஆயிரத்துக்கும் அதிக குழுவினர் இருந்தனர். இதற்குப் பின்னால் சில அரசியல் அழுத்தம் இருந்தது. அத்துடன் மருத்துவபீட மாணவர்கள் மட்டுமன்றி பிற மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர். - எனவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் சுகாதார அமைச்சுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய மோசமான நீர்த்தாரைப் பிரயோகத்தில் 96 வரையான மாணவர்கள் காயமடைந்தனர். (ம)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரின் அலுவலகத்தில், எதிர்க் கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வியாழேந்திரன், சித்தார்த்தன், சிவமோகன் தவிர்ந்த ஏனைய பன்னிரண்டு கூட்டமைப்பு எம்.பிக்களும் பங்குபற்றினர்.

அண்மையில் வடக்கு மாகாண சபை விவகாரத்தை ஒட்டிக் கட்ட விழ்ந்த சம்பவங்களைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட எம்.பியுமான மாவை. சேனாதிராசா இந்தக் கூட்டத்தில் விளக்கினார்.

இந்தக் கூட்டத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனின் செயற்பாடு குறித்து அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டவர்களுள் ஈ.பி.ஆர். எல்.எவ்வைச் சேர்ந்த வன்னி மாவட்ட எம்.பியான சிவசக்தி ஆனந்தனும் ஒருவர் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

### காயமுற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் துரத்தியடித்த சம்பவத்தின்போது களேபரத்தில் சிக்கிக் காயமடைந்த 4 பொலிஸாருக்கும், விசேட அதிரடிப் படையினர் மூவருக்கும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை அளிப்பதற்கு அங்கிருந்த டாக்டர்கள் மறுத்துவிட்டனராம்.

இதனையடுத்து அவர்கள் பின்னர் பொலிஸ் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டு அங்கு அவர்களுக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்தக் களேபரத்தில் காயமுற்ற அறுபதுக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சிகிச்சை அளித்த தேசிய வைத்தியசாலை டாக்டர்கள், அதே களேபரத்தில் காயமுற்ற பொலிஸாருக்குச் சிகிச்சை அளிக்க மறுத்துள்ளனர் என்று கூறப்பட்டது.

மேற்படி பல்கலைக்கழக மாணவர்கள் 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகவே இந்தப் பேரணியை முன்னெடுத்தனர்.

அதே மருத்துவக் கல்லூரியை அரச மருத்துவர் சங்கமும் கடுமையாக எதிர்த்து நிற்கின்றது.

இந்தநிலையில் பேரணியில் சென்ற பல்கலை மாணவர்கள் சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குள் புகுந்து, அதைப் பலவந்தமாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்களையே பொலிஸார் நீர்த்தாரை பீச்சி அடித்து, கண்ணீர்ப் புகைக் குண்டு வீசித் துரத்தியடித்தனர்.

அந்தக் களேபரத்தில் காயமுற்ற பொலிஸாருக்கும் விசேட அதிரடிப் படையினருக்குமே சிகிச்சை அளிக்க கொழும்பு தேசிய வைத்தியசாலை டாக்டர்கள் மறுத்தனர் என்று கூறப்படுகின்றது. (உ)

### சு.க. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்காகச் சுதந்திரக் கட்சி அதன் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்திருந்தது.

அந்தக் குழுவே இன்று கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்றது.

புதிய அரசமைப்பு விவகாரங்களுக்கான அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றுள்ள கூட்டமைப்புப் பிரதிநிதிகளான இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் இன்றைய சந்திப்பில் கூட்டமைப்பு சார்பில் பங்குபற்றுவர் எனத் தெரியவந்தது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான சு.க. குழு, புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி குழுவுடன் பேச்சு நடத்தியிருந்தது.

புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்க வேண்டும் என ஐ.தே.க. வலியுறுத்தியது. சு.க. அதை எதிர்த்தது.

இந்த விடயம் குறித்து தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திய பின்னர் சு.கவின் முடிவு தெரிவிக்கப்படும் என அப்போது கூறப்பட்டது.

அதற்கு அமையவே இன்று சு.க. - கூட்டமைப்பு சந்திப்பு இடம்பெறுகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் விடயம் தொடர்பாக ஏற்கனவே இணக்கப்பாடுகள் வந்திருப்பதால், இன்றைய கூட்டத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புக் குறித்தே பிரதானமாகப் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ்.** பிரதேசத்தில் நாவாந்துறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப் பிரதேசம், துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும்-

கிளிநொச்சிபிரதேசத்தில் சிலா வத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்-

வவுனியா - பிரதேசத்தில் நெளுக்குளம் பாடசாலைப் பிரதேசம், கூமாங்குளம், உக்கிளாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுதல்; எந்தவித அரசியல் நோக்கமும் இல்லை!

## நாடாளுமன்றில் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் விளக்கம்



கொழும்பு, ஜூன் 23

காணாமல்போனோர் அலுவலகம் நிறுவுவதை அரசியல் ரீதியாகப் பார்க்க வேண்டாம். மனிதாபிமான அடிப்படையில் பாருங்கள் என்று மீள்குடியேற்றம், சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

காணாமல்போனவர்கள் விடயத்துக்குத் தீர்வளிக்கும் வகையிலான அனைத்துநடவடிக்கைகளையும் அரசு நிச்சயம் முன்னெடுக்கும் என்று அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணாமற் போனோர் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறை வேற்றுதலும்) திருத்தச்சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் நிறுவப்படுவதற்கானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனூடாகப் போரின் போது காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று கோரும் உறவினர்களுக்குப் பதிலளிப்பதே நோக்கமாகும். தம்முடைய உறவுகளை இழந்து வாழும் மக்கள் காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோருவதற்கு உரிமை உள்ளவர்கள். அந்த உரிமையை நாம் நிராகரிக்க முடியாது.

நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஆயிரம் வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இடையில் பிளவுகள் ஏற்படாது நாட்டில் ஐக்கியமாக வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கச் சூழல் உருவாகுவதற்கான நிலைமைகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தை கைவிட முடியாது. எமது அரசு சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவியுள்ளது. தகவலறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அவ்வாறான நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகத் தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை நிறுவும் சட்ட மூலத்தை தற்போது திருத்தங்களுடன் நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

இதன்மூலம் அந்த உறவுகளுக்கு நிச்சயமான தீர்வொன்று கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

ஆகவே, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டமூல விடயத்தை எவரும் அரசியலாக்கக் கூடாது. இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் பார்க்க வேண்டும். போரின் பின்னரான காலப்பகுதியின் பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்பட வில்லை.

அவ்வாறான நிலையில் இந்த அலுவலகத்தின் ஊடாக மன ரீதியாகப் பாதிக்கப்பட்ட உறவுகளுக்குத் தீர்வுகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்புகின்றோம். இந்த விடயத்தில் நாம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

தற்போது வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்ச்சியாகபோராடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் கோரிக்கைகள் இந்தப் பொறிமுறையூடாக நிறைவேறும். மேலும் அரசு தமிழ் மக்களை ஒருபோதும் கைவிடாது.- என்றார். (எ)

# எல்லை தாண்டி மீன்பிடித்த தமிழக மீனவர் நால்வர் கைது!

நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் நான்கு பேரை எல்லை தாண்டி வந்தனர் என்று தெரிவித்து இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் நெடுந்தீவு அருகே தமிழக மீனவர்கள் நான்கு பேர் நேற்று இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் எல்லைத்தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் நால்வரையும் உடனடியாகக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களின் படகும் சிறை பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 4 பேரும் காங்கேசன் துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## போக்குவரத்து விழிப்புணர்வு நாடகம்



போக்குவரத்து பொலிஸாரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகரில் நேற்று நண்பகல் போக்குவரத்து விழிப்புணர்வு நாடகங்கள் இடம்பெற்றன. வீதிகளைக் கடத்தல், சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோக்கள் ஆகியனவற்றில் பயணிக்கும் முறைகள் தொடர்பில் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்குத் தெளிவூட்டப்பட்டன. இதில் பாடசாலை மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். (எ-21)

# காணாமற் போனோர் அலுவலகத்தால் நாட்டுக்கு நெருக்கடி ஏற்பட இடமளியோம்!

## நாடாளுமன்றில் தெரிவித்தார் நாமல்



கொழும்பு, ஜூன் 23

காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்தின் ஊடாக நல்லாட்சி அரசு திரைமறைவிலான விடயங்களைச் செய்து நாட்டை மீண்டும் பயங்கரத்துக்கு இட்டுச்செல்வதாயின் அதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அங்கு அலுவலகத்தின் அதிகாரிகள் யாருக்கு எதிராகவும் எந்த வழக்கும் தொடர முடியாத அளவுக்கு சட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதன் உள்நோக்கம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் காணாமற் போனோர் அலுவலகம் பற்றிய நிறுவுதல் பணிகளை நிறைவேற்றுவதற்கான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதிமன்றம், பொலிஸாருக்குக்கிடைக்காத அதிகாரங்கள் இந்த அலுவலகத்துக்கு வழங்கப்படவுள்ளன. கடந்த ஒன்றரை வருடங்களாக ஜனாதிபதி குறித்த அலுவலகத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தார். இவ்வாறு நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு எதிராகச் சிவில் அல்லது வேறு வகையிலான வழக்குகள் தொடர முடியா.

13ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்த நல்லாட்சி அரசு, ஜனாதிபதியையும் கூட நீதிமன்றத்துக்குஅழைத்து வர முடியும் என்று கூறியது. அப்படிக் கூறிய அரசு இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் போது காணாமற் போனோர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளை சிவில் அல்லது குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்துக்கு அழைத்துவர முடியாது. மேலும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பாக எவரும் எந்தக் கேள்வியும் எழுப்ப முடியாது.

தகவல் அறியும் உரிமைக்கு அரசு பெருமிதம் கொண்டது. ஆனால், இந்த அலுவலகத்தால் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் தொடர்பில் தகவலறியும் சட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் அறிந்து கொள்ள முடியாது. எவ்வாறாயினும் காணாமற் போனோர் தொடர்பான தகவல்களைத் தேடியறியும் செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்புத்தெரிவிக்கவில்லை. 1988, 1989 களில் காணாமல் போனோர் பற்றியும் தேடியறிய வேண்டும்.

ஆனால், காணாமற் போனோர் அலுவலகத்தின் ஊடாகக் காணாமற் போனோரைக் தேடியறிவதற்கு ஏதேனும் உள்நோக்கங்கள் இருந்தால் அவற்றால் முழு நாடுமே மீண்டும் நெருக்கடிக்குள் செல்லுமாயின் அதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம்.- என்றார். (எ)



# தாய் சக்தி கலைக்கூடம் - புளியங்கூடல்

## பெருமையுடன் வழங்கும்

## எனையாளும் அன்னை

## செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜ மகாமாரி அம்மன் புகழ்பாடும்



# சூலம் ஏந்திய தீ விழியாள்

தென்னிந்தியாவின் பிரபல இசையமைப்பாளர் அ.இலக்கியனின் இசைவண்ணத்தில்

## பக்தி இசைப்பேழை வெளியீட்டு விழா

காலம்: இன்று (23.06.2017) வெள்ளிக்கிழமை மாலை 5 மணி

இடம்: ஆலய முன்றில்

### இசைப்பாடல் இறுவட்டில் பாடிய தென்னிந்திய பாடகர்கள்


பின்னி கிருஷ்ணகுமார்


சுகந்தி


Dr. க. கிருஷ்ணகுமார்


இராகுல் நம்பியார்


பவன்


அந்தோனிதாசன்


கவிதா கோபி


அனிந்தா கார்த்திகேயன்


நேகா வேணுகோபால்


கௌசிக்

### பாடலாசிரியர்கள்


வீரமணிஐயர்


வேலணையூர் சுரேஷ்


குணசுந்தரி மரு சிவஞானச்செல்வம்


தீபிகா சுப்பிரமணியம்

### தயாரிப்பாளர்


ஆலய அறங்காவலர் து.சி.செந்தூரன்

### இசையமைப்பாளர்


'இசைராஜகீர்த்தி' அ.இலக்கியன்


Dr. க. கிருஷ்ணகுமார்

எதிர்வரும் (26.06.2017) திங்கட்கிழமை

## பூங்காவனத்திருவிழா இரவுநேர இசைவிருந்து

தென்னிந்தியாவின் பிரபல திரையிசை, கர்நாடக இசை விற்பன்னர்கள்
திரு.Dr.K.கிருஸ்ணகுமார், சந்திரமுகி திரைப்பட ராரா பாடல் புகழ் பின்னி கிருஷ்ணகுமார் ஆகியோர்
தென்னிந்தியாவின் பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன் இணைந்து நடாத்தும்

# மாபெரும் பக்தி இசை வேள்வி


பின்னி கிருஷ்ணகுமார்


அனுசரணை:

## விஜிதா அரிசி ஆலை

தாவடி தெற்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.




## Mayavan Transport,

Adiyapatham Road,
Press Lane, Kokuvil.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள ஸ்ரீராம் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.